பக்கங்கள் எட்டு

விலை ரூபா: 5.00

# வலம்புரி

VALAMPURI

சங்கு 01 வள்ளுவர் ஆண்டு 2031 ஐப்பசி 19 சனிக்கிழமை ( 04-11-2000 ) தொ. பேசி 3378 ஒலி: 320

லாலாசோப்
சண்சயின் சோப்
ஏக விநியோகஸ்தர்
ஏ. எஸ். ஆறுமுகம்
பல்பொருள்வாணிபம்
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
லாலாசோப் அச்சுவேலி (இ 1985)

# ★ இலங்கையின் உள்நாட்டு பிரச்சினையில் நோர்வேயின்தலையீட்டை ஜே. வி. பி. நிராகரிக்கிறது!

## பிரச்சாரசெயலர்டில்வின்சில்வாஅறிக்கை

(கொழும்பிலிருந்து நமது நிருபர்)

இலங்கையின் இனப்பிரச்சினைக்கான சமாதான முயற்சிகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ள நோர்வே அரசின் தீர்வுமுயற்சிகளை மக்கள் விடுதலை முன்னணி (ஜே. ஜவி. பி.) நிராகரித்துள்ளது.

இலங்கையில் காணப்படும் இனப்பிரச்சினை வெறுமனே ஒரு உள்நாட்டுப் பிரச்சினை. இத்தகைய பிரச்சினையில் நோர்வே அரசு தலையிடுவதை ஒருபோதும் அனுமதிக்கமுடியாது,

இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் பிரச்சாரச் செயலாளர் டில்வின் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாகநோர்வே அரசின் தலையீடு சம்மந்தமாக மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) யின் பிரச்சாரச் செயலாளர் டில்வின் சில்வா விடுத்த கண்டன அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

இராணுவக் கட்டுப்பாடற்றவன்னிப்பிரதேசத்திற்கு நோர்வேயின் விசேட பிரதிநிதி எரிக்சோல்ஹைம்சென்று விடுதலைப் புலிகளின் தலை

(8ஆம்பக்கம்பார்க்க)

## ஜனாதிபதியுடன் இன்றுசந்திப்பு

[கொழும்பு]

இராணுவக் கட்டுப்பட்டற்ற வன்னிப் பகுதியில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கும் நோர்வேயின் விஷேட பிரதிநிதி எரிக்சோல்ஹைக்கும் இடையே இடம் பெற்ற பேச்சு வார்த்தையை அடுத்து இன்று ஜனாதிபயை நோர்வே பிரதிநிதி சந்தித்து பேசவுள்ளார்.

பிரதி அமைச்சர் பதவிஎற்பு வைபவத்தினல் நேற்று இச் சந்திப் இடம்பெறவில்லை. (வ)

## குடாக்கடலில் மீன் பிடிக்க நேற்று முதல் தடை

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாக் கடலில் நேற்று முதல் மீன்பிடிப்பதற்கு இராணுவத்தினர் தடைவிதித்துள்ளனர்.

மீன் பிடித்தலுக்கான இத்தடை உத்தரவு மறு அறிவித்தல்வரை நடைமுறையில் இருக்கும் எனத் தெரிவிக்கப்

[8 ஆம் பக்கம் பார்க்க]

## பண்டாரவளைகொலைக்கு கட்டளை தளபதி கண்டனம்

(யாழ்ப்பாணம்)

பண்டாரவளை, பிந்துனுவெவ புனர்வாழ்வு தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப் பட்டிருந்த தமிழ் இளைஞர்கள் மீது கடந்த மாத 25ஆம் திகதி மேற்கொள்ள பட்ட தாக்குதலை வன்மையாகக் கண்டிக்கிறேன்.

[8 ஆம் பக்கம் பார்க்க

## எரிக்சோல் 'பிரபாவுடன்' பேசுவதை முன்கூட்டியே அறிந்திருந்தேன்

### எதிர்க்கட்சித் தலைவர் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

நோர்வே அரசு விடுதலைப் புலிகளுடன் பேசவிருந்த விடயம் எனக்கு முன்னரேதெரிந்த விடயமாகும். இதனை அரசியல் தேவைகளுக்காகவும் பிற நன்மை கருதியும் தான் வெளியிட வில்லை என்று ஐக்கியதேசியக் கட்சித் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்துள்ளதுடன் பேச்சு வார்த்தைக்குஆதரவு வழங்குவதாகவும்தெரிவித்துள்ளார்.

நோர்வே அரசின் சமாதான முயற்சியை அரசு பயன்படுத்தி புலிகளுடன் பேச்சு வார்த்தையை ஆரம்பிக்க வேண்டும் எனவும் ஐக்கிய தேசியக் கட்சியின் பேச்சாளர் கருண கொடித்துவக்கு தெரிவித்துள்ளார், (வ)

## முல். கடலில் சங்கமமான கடற்கரும் புலிகள்!

(வவுனியா)

முல்லைத் தீவு கடற்பரப்பில் இலங்கை கடற்படையினருடனான மோதலில்இரு கடற் கரும்புலிகள் உட்பட நான்கு கடற் கரும்புலிகள் உயிரிழந்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## 35 பிரதி அமைச்சர்கள் நேற்று பதவியேற்பு

(கொழும்பு)

அலரிமாளிகையில்நேற்றுப் பிற்பகல் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா முன்னிலையில் 35 பிரதியமைச்சர்கள் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டனர்,

பாதுகாப்பு, நிதி, ஊடகம் விளையாட்டு மற்றும்சில

(8ஆம் பக்கம்பார்க்க)

## ★ வன்னிப்பேச்சுவார்த்தை 'ஈழநாதம்' பத்திரிகையில் பிரபா-எரிக்சோல்ஹைம்

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப்பிரதேசத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரனுக்கும் நோர்வேயின் விஷேட பிரதிநிதி எரிக்சோல்ஹைம்ற்கும் இடையே இடம் பெற்ற வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பேச்சு வார்த்தையின் போது பிடிக்கப்பட்ட படம் நேற்றைய 'ஈழநாதம்' பத்திரிகையின் முதல் பக்கத்தில் (8 ஆம் பக்கம் பார்க்க)

## யு.என்.பி யின் செயலராக முஸ்லிம் ஒருவர் நியமனம்?

(கொழும்பு)

ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச்செயலாளராக முஸ்லிம் ஒருவரை நியமிக்க வேண்டுமென்ற கோரிக்கை கட்சிக்குள் வலுப்பெறுவதாகத் தெரிய வருகிறது.

முஸ்லிம் இனத்தைச் சேர்ந்த ஒருவரை பொதுச் செயலாளராக நியமிப்பதன் மூலம் சிறுபான்மை மக்களின் ஆதரவை யு.என்.பி பெற முடியுமென்ற கருத்தும் முன் வைக்கப்பட்டுள்ளது.

இக் கருத்தினையடுத்து 94 ஆம் ஆண்டில் யு.என்.பி யின் வேட்பாளராகப் போட்டியிட்ட ராஸிக்சாருக் பொதுச்செயலாளராக நியமிக்கப்படலாமெனவும், இதற்கு தற்போதைய செயளாளர் காமினி அத்துக்கோறளை சம்மதம் தெரிவித்துள்ளதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன. [ந]

## வெளிவிவகார அமைச்சர் கதிர்காமர் இங்கிலாந்து பயணமானார்!

(கொழும்பு)

இங்கிலாந்தில் அமுலுக்கு கொண்டு வரப்பட்டுள்ள புதிய பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை தடை செய்வதை வலியுறுத்து முகமாக வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் நேற்று லண்டன் போய்ச் சேர்ந்துள்ளார்.

இங்கிலாந்தின் உள்துறை அமைச்சர் ஜெக் ஷோவைச்

(8ஆம் பக்கம் பார்க்க)

## கடற்படைத் தளபதி இந்தியா பயணம்

(கொழும்பு)

இலங்கையின் கடற்படைத் தளபதி ''சிசில் திஷேரா'' நான்கு நாள் பயணமொன்றினை மேற்கொண்டு நாளை ஞாயிற்றுக் கிழமை இந்தியா செல்லவுள்ளார்.

இவர் தனது இந்தியப்பயணத்தின்போதுஇந்தியமீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால்தாக்கப்படுவது குறித்துஇந்தியாவின்குற்றச்சாட்டுத்தொடர்பாக் அந்நாட்டுக்கடற்படைத்தளபதிசுசில்குமாருடன் விவாதிப்பாரெனவும்தெரியவருகிறது. (ஸ்ரீ

## வெடி விபத்தில் ஒருவர் காயம்

(யாழ்ப்பானம்)

ஊர்காவற் துறை பகுதியில் எதிர்பாராத வெடி விபத்தொன்றில் ஈ.பி.டி.பி உறுப்பினர் ஒருவர் கடும் காயங்களுக்குள்ளானார்.

அந்தோனிப்பிள்ளை யூட் கமால்(வயது 17)என்பவரே காயமடைந்தவராவர்.

காயமடைந்தவர் யாழ். போதனாவைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ந-12-43)

## திருநகர்வீட்டு கிணற்றில் 26துப்பாக்கிகள் மீட்பு!

(கிளிநெச்சி)

கிநொச்சி மாவட்டத் தில், தனியார் வீடு ஒன்றின் கிணற்றிலிருந்து 26 தானியங்கித் துப்பாக்கிகள் மீட்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் ''திருநகர்'' என்ற இடத்தில் வீட்டுக் கிணறொன்றினை இறைத்துத் துப்பரவாக்கிய போதே இத்துப்பாக்கிகள் மீட்கப்பட்டுள்ளது.

இதேவேளை வன்னியில் விளாத்திக்குளம் என்ற இடத்தில் இடியன் துவக்கு தவறுதலாக வெடித்ததில் பாலையா தவரூபன் என்ற இளைஞன் காயமடைந்த நிலையில் மல்லாவிவைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அவரது இடதுகால் முழங்காலுக்குக் கீழ் அகற்றப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாடங்கள் தெரிவித்தன. (ம)

## சிறு விளம்பரம்

### அலுவலக உதவியாளர்கள் (பெண்கள்)

G.C.E O/L படித்தவர்கள், தமிழ், ஓரளவு ஆங்கில அறிவு, நிர்வாகத்திறமை உள்ளவர்கள் நற்சான்று, கல்வித் தகைமைகளுடன் நேரில் விண்ணப்பத்துடன் சமுகமளிக்கவும். தினமும் காலை 11 00 மணி முதல் 2.00 மணி வரை சமுகம் தரவும். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி;- ஜெசித்தாரா, சுண்டுக்குழி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை, சுண்டுக்குழி.

(கி/993)

## மென்பந்து கிரிக்கெட் போட்டி

(சுண்டுக்குளி)

புனித சாள்ஸ் மகா வித்தியாலய ''பாடசாலை தினத்தை'' முன்னிட்டு மட்டுப்படுத்தப்பட்ட 20 பந்து பரிமாற்றங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட மென்பந்து கிரிக்செட் போட்டி இன்று நடைபெறுகிறது.

பி.ப 1.00 மணிக்கு நடைபெறவிருக்கும் இவ் மென்பந்து கிரிக்கெட் போட்டியில் பழைய மாணவர் அணி, பாடசாலை அணி ஆகியவை பங்கு கொள்ளவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-110)

## 124 வது நிறைவுவிழா

(சுண்டுக்குளி)

யாழ். புனித சாள்ஸ் மகா வித்தியாலய 124 வது ஆண்டு நிறைவு விழா பாடசாலை அதிபர் திருமதி சின்னத்துரை தலைமையில் இன்று நடைபெறுகிறது.

இதனையொட்டி இன்று காலை 9 00 மணியளவில் ஆசனக் கோயிலில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு தொடர்ந்து பாடசாலை மாணவ மாணவியர்களின் கலை நிகழ்வுகள் இடம் பெறும். (உ-110)

## நாளை பரீட்சை

(யாழ்ப்பாணம்)

சைவ பரிபாலன சபையினரால் நடத்தப்படும் சைவ நெறித்தேர்வு நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, வவுனியா ஆகிய மாவட்டங்களில் 345 நிலயங்களில் தேர்வு இடம்பெறும்.

ஆண்டு 2 முதல் 12 வரை கற்கும் மாணவர் மேற்படி பரீட்சைக்கு தோற்ற முடியுமென தெரிவிக்கப்படுகிறது. (க)

## நாளை ஒன்றுகூடல்

[யாழ்ப்பாணம்]

நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 10 30 மணிக்கு திருமறைக் கலாமன்றத்தில் மாதா மாதம் நடைபெறும் கலைஞர்களுக்கான வழிபாடும் ஒன்று கூடலும் அதனைத் தொடர்ந்து பெறுப்பாளர் கூட்டமும் நடைபெறவுள்ளது. (க)

## பிற்போடப் பட்டது

(யாழ்ப்பாணம்)

''வடக்கு கிழக்கு மாகாண கல்வி கலாசார அமைச்சினால் இம்மாதம் 3, 4, 5ம் திகதிகளில் நடைபெறுவதற்கு ஒழுங்கு செய்யப்பட்ட கலை, இலக்கிய விழா பிற்போடப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.'' (க)

## பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

ஒக்ரோபர் மாதம் -02ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின்படி யாழ். குடா நாட்டிலிருந்து வெளியிடங்களிற்கு பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் பிரதேச செயலர் பிரிவு ரீதியாகத் தரப்படுகின்றன.

### சங்கானை

| | |
|---|---|
| 153129 ஏ | 158488 ஏ |
| 163946 ஏ | 163954 ஏ |
| 164116 ஏ | 164246 ஏ |
| 164246 பி | 165487 ஏ |
| 165487 பி | 165859 ஏ |
| 165859 பி | 166524 ஏ |
| 166793 ஏ | 166793 பி |
| 166794 ஏ | 166801 ஏ |
| 166801 பி | 166832 ஏ |
| 166832 பி | 166832 சி |
| 166832 டி | 166912 ஏ |
| 166912 பி | 166912 சி |
| 166913 ஏ | 166913 பி |
| 169325 ஏ | |

### நல்லூர்

| | |
|---|---|
| 161502 ஏ | 164329 ஏ |
| 164329 பி | 165644 ஏ |
| 165644 பி | 165794 ஏ |
| 165794 பி | 166484 ஏ |
| 166541 ஏ | 166543 ஏ |
| 166543 பி | 166604 ஏ |
| 166651 ஏ | 166651 பி |
| 166651 சி | 166651 டி |
| 166775 ஏ | 166874 ஏ |
| 166900 ஏ | 166900 பி |
| 166933 ஏ | 168987 ஏ |
| 169357 ஏ | 169357 பி |
| 169357 சி | |

### சண்டிலிப்பாய்

| | |
|---|---|
| 150708 ஏ | 151824 ஏ |
| 152198 ஏ | 152198 பி |
| 152198 சி | 160447 ஏ |
| 160447 பி | 163904 ஏ |
| 163904 பி | 163904 சி |
| 163989 ஏ | 163989 பி |
| 163989 சி | 163989 டி |
| 164016 ஏ | 164054 ஏ |
| 164054 பி | 165691 ஏ |
| 165691 பி | 165691 சி |
| 165691 டி | 165753 ஏ |
| 165813 ஏ | 165862 ஏ |
| 166474 ஏ | 166474 பி |
| 166475 ஏ | 166475 பி |
| 166475 சி | 166477 ஏ |
| 166485 ஏ | 166486 ஏ |

| | |
|---|---|
| 166486 பி | 166514 ஏ |
| 166533 ஏ | 166533 பி |
| 166533 சி | 166536 ஏ |
| 166537 ஏ | 166546 ஏ |
| 166560 ஏ | 166560 பி |
| 166560 சி | 166567 ஏ |
| 166568 ஏ | 166577 ஏ |
| 166577 பி | 166616 ஏ |
| 166616 பி | 166648 ஏ |
| 166648 பி | 166648 சி |
| 166693 ஏ | 166693 பி |
| 166693 சி | 166698 ஏ |
| 166698 பி | 166735 ஏ |
| 166735 பி | 166735 சி |
| 166805 ஏ | 166805 பி |
| 166840 ஏ | 166879 ஏ |
| 166880 ஏ | 166907 ஏ |
| 166921 பி | |
| 166921 ஏ | 166921 சி |
| 166921 டி | 166928 ஏ |
| 168975 ஏ | 168976 ஏ |
| 168983 ஏ | 168996 ஏ |
| 169311 பி | 169311 சி |
| 169438 ஏ | |

### தெல்லிப்பளை

| | |
|---|---|
| 161985 ஏ | 161985 பி |
| 165610 ஏ | 165634 ஏ |
| 166509 ஏ | 166509 பி |
| 166575 ஏ | 166575 பி |
| 166575 சி | 166581 ஏ |
| 166587 ஏ | 166587 பி |
| 166587 சி | 166587 டி |
| 166587 ஈ | 166904 ஏ |
| 166930 ஏ | 166930 பி |
| 168985 ஏ | 168985 பி |

### உடுவில்

| | |
|---|---|
| 156876 எ | 143987 ஏ |
| 152072 ஏ | 152072 பி |
| 158888 ஏ | 158888 பி |
| 158888 சி | 160578 ஏ |
| 160578 பி | 160578 சி |
| 160578 டி | 165678 ஏ |
| 165722 ஏ | 165722 பி |
| 166449 ஏ | 166450 ஏ |
| 166450 பி | 166604 பி |
| 169604 சி | 166604 டி |
| 166623 ஏ | 166623 பி |
| 166705 ஏ | 166705 பி |
| 166705 சி | 166738 ஏ |
| 166738 பி | 166738 சி |
| 166747 ஏ | 166747 பி |
| 166909 ஏ | 166909 பி |
| 166909 சி | 166909 டி |
| 169001 ஏ | 169003 ஏ |
| 169360 ஏ | 169360 பி |
| 169360 சி | |

தேர்தல் முறைகேடுகள் குறித்து

## மேன்முறையீட்டு மன்றில் மனுக்கள் தாக்கலாகின

(கொழும்பு)

நடைபெற்று முடிந்த பொதுத் தேர்தலில் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதாக கூறி மேன்முறையீட்டு நீதிமன்றில் மூன்று மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இம்மனுவில் தேர்தலின் போது குறிப்பிட்ட இடங்களில் மோசடிகள் இடம் பெற்றதனால் அங்கு நடைபெற்ற வாக்கெடுப்பினை செல்லுபடியற்றதாக அறிவிக்கப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்திற்கான மனுவைதமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர்ச. அரவிந்தனும், கண்டிமாவட்டத்திற்கான மனுவை ஐ.தே. கட்சியின் வேட்பாளர் ஜெமுன அபயசுந்தரவும், கண்டியிலிருந்து தேசிய ஐக்கிய முன்னணியின் சார்பாக ரவூஹக்கீம் தெரிவுசெய்யப்பட்டதை எதிர்த்து ஐ.தே. கட்சியின் வேட்பாளர்காமினி ராஜபக்ஸவும் மேற்படி மனுவை தாக்கல்செய்துள்ளனர்.

இதேபோல புத்தளம் மாவட்டத்தில் விருப்புவாக்குகள் மீண்டும் எண்ணப்பட வேண்டுமென ஐ.தே. கட்சியின் வேட்பாளர் சித்திரக்குமாரவும்மனு வொன்றை தாக்கல் செய்துள்ளார் என தெரியவருகிறது.

(வி)


### ஜோ. எகட்டனின் ஜெசித்தாராவின்

### உணவுப் பொதிகள்

பிற்பகல் 12-00 முதல் 3-00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

ஜோ- எகட்டனின்
ஜெசித்தாரா
சுண்டுக்குழி மகளிர் கல்லூரி முன்ஒழுங்கை,
சுண்டுக்குழி.

(கி-992)


யாழ். கல்வி வலய பாடசாலைகளுக்கு

## பகுதி நேர ஆங்கில ஆசிரியர் நியமிக்கப்படுவர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கு. 2001 ஆம் ஆண்டில் ஒரு வருட ஒப்பந்த அடிப்படையில் பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களாக கீழ்க்குறிப்பிடப்படும் தகுதிகளைக் கொண்டவர்கள் போட்டிப் பரீட்சை, நேர்முகப்பரீட்சை ஆகியவற்றின் மூலம் நியமனம் செய்யப்பட உள்ளதாக கல்விப் பகுதியினர் தெரிவித்துள்ளனர்.

மேலும் தெரிவிக்கையில் 2001.01.01 ஆந் திகதிக்கு 18 வயதிற்கு குறையாதவராயும் 59 வயதிற்கு மேற்படாதவராயும் இருத்தல் வேண்டும்.

க.பொ.த. (உயர்தரம்) பரீட்சையில் ஆங்கில மொழி-இலக்கியத்துடன் மூன்று பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல். அல்லது க.பொ.த.(உயர்தரம்) பரீட்சையில் ஏதேனும் மூன்று பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தலுடன் க.பொ.த. (சா.த) பரீட்சையில் ஆங்கில மொழியில் விசேட சித்தி அல்லது ஆங்கில இலக்கியத்தில் திறமைச்சித்தி பெற்றிருத்தல் அல்லது ஆங்கில மொழி மூலம் சிரேஷ்ட பாடசாலைத் தராதரப்பத்திர பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

இவ்வாண்டு ஒப்பந்த அடிப்படையிலுள்ள பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களும் ஏற்கனவே அவ்வப் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள விண்ணப்பப்படிவங்களில் விண்ணப்பித்து நடைபெறவுள்ள போட்டிப்பரீட்சைக்கும், நேர்முகப்பரீட்சைக்கும் தோற்றுதல் வேண்டும். புதிதாக விண்ணப்பிக்க விரும்புவோர் விண்ணப்பப் படிவங்களை யா. கொக்குவில் இந்துக்கல்லூரியில் இயங்கும்யாழ்ப்பாண வலயக்கல்வி அலுவலகத்தின் தற்காலிக பணிமனையில் பெற்று 2000.11.10 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## பா.ம. உறுப்பினர்களுக்கு பயிற்சி வகுப்புக்கள்

(யாழ்ப்பாணம்)

நடைபெற்று முடிந்த பாராளுமன்றத் தேர்தலின் போது புதிதாக தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அண்மையில் பாராளுமன்ற விவகாரங்கள் தொடர்பாக பயிற்சி வகுப்புக்கள் நடத்தப்பட்டன.

குறிப்பாக அமைச்சர்களுடனான கலந்துரையாடல்கள்மற்றும் பாராளுமன்ற அமர்வுகளின் போது கடைப்பிடிக்க வேண்டிய முறைகள் குறித்து பயிற்சி வகுப்புக்கள் நடத்தப்பட்டது.

(க-03)

## முக்கிய செயலமர்வு

(தென்மராட்சி)

யாழ். மாவட்டத்தில் கிராமிய வங்கிகளின் செயற்பாடுகளை ஒன்றிணைப்பது பற்றிய விடயங்களை ஆராயும் பொருட்டு யாழ். மாவட்ட கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் சமாசம் எதிர்வரும் 9ம் திகதி காலை 9-30 மணிக்கு செயலமர்வு ஒன்றினை யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கேட்போர் கூடத்தில் நடத்த உள்ளது.

சமாசத்தலைவர் சீ. வீ. கே சிவஞானம் தலைமையில் நடைபெறும் இச் செயலமர்வில் கூட்டுறவு ஆக்க உதவி ஆணையாளர் எஸ். கே. சண்முகநாதனும் பங்கு கொள்ளவுள்ளார். (க-77)

## சோதிட வகுப்பு ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்த சோதிட வகுப்பு மீண்டும் நாளை காலை 10 மணிக்கு அருள் ஜோதி சோதிட நிலையம், 502, கே. கே. எஸ். வீதி, என்னும் முகவரியில் நடைபெறவுள்ளதாக தமிழ் சோதிடர் ஆய்வு ஒன்றியம் அறிவித்துள்ளது. (வி)


### அறிவித்தல்

**சித்த மருந்துவத் துறை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், இலங்கை.**

**புதிய அனுமதிகள் 1999/2000**

மேற்படி புதிய அனுமதி பெற்ற மாணவர்களுக்கான விரிவுரைகள் எதிர்வரும் 06-11-2000 திங்களன்று காலை 9-00 மணிக்கு பிரதான வளாகத்தில், நூல் நிலையத்திற்கு அண்மையில் அமைந்துள்ள மாணவர் நிலையத்தில் ஆரம்பமாகும் என்பதை அறியத்தருகின்றேன்.

பதிவாளர்

(கி-996) 3-11-2000



### நன்றி நவிலல்

எமது குடும்பத்தலைவரின் மரண நிகழ்வின் போது உறுதுணை புரிந்த உற்றார், உறவினர்களுக்கும், அனுதாபச் செய்திகள் வெளியிட்ட ஐயனார் சனசமூக நிலையம், பொது அமைப்புகளுக்கும் சிறப்பாக 'வலம்புரி' குடும்பத்தினருக்கும் அன்னார் நோய்வாய்ப்பட்டிருந்த வேளை தகுந்த சிகிச்சைகள் வழங்கி பராமரித்த யாழ். போதனா வைத்தியசாலை மருத்துவர்கள் மற்றும் ஊழியர்களுக்கும் எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

வரிசப்புலம்,
சுன்னாகம்.

மனைவி
இராசா சின்னம்மா

(கி-994)

# தேசிய ஒருமைப்பாட்டை உருவாக்குவதற்கு ஒழுக்கம் சார்ந்த கல்வியே பயன்தரவல்லது

கு. சண்முகநாதன் B.Ed, MA (Edu)
(அதிபர், யாழ் மானிப்பாய் இந்துக்கல்லூரி)

தேசிய கல்வி ஆணைக் குழுவின் முதலாவது அறிக்கையில் பாடசாலைகளில் எதிர்காலத்தில் அமுல்படுத்தப்பட வேண்டிய விழுமியக் கல்வி பற்றி அதிக அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பாடசாலையும் தனக்கெனத் தனித்துவமான கலாசாரத்தைக் கொண்டிருக்க வேண்டுமென்ற ஆணைக்குழுவின் எதிர்பார்ப்பு விழுமிய கல்வி தொடர்பான விழிப்புணர்வையே அடிப்படை நோக்காகக் கொண்டதெனலாம். நாடு எதிர் நோக்கும் பல்வேறு தரப்பட்ட பிரச்சினைகளுக்கும் எதிர் காலத்தில் கல்வி மூலமே தீர்வு காணப்படலாம் என்று ஆணைக்குழு கருதுகிறது.

தனியாள் ஒருவரிடத்தே ஏற்படும் ஆளுமை விருத்தி, ஒழுக்கம், சமூகஇசைவாக்கம் என்பவை தேசிய ஒருமைப்பாட்டைத் தோற்றுவிக்குமென்றும் இதன் மூலம்தேசிய பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் என்றும் நம்பப்படுகிறது.

இதன் காரணமாக கல்வித் துறையில் மிக அவசரமாக செயற்படுத்தப்படவேண்டிய இரு அம்சங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. அவையாவன.

1. சீலமேம்பாடு
2. தேசிய மேம்பாடு அல்லது நாட்டு மேம்பாடு

கல்வி அபிவிருத்தி என்பது தனியாள் ஒருவரிடையே ஏற்படும் சீலமேம்பாடு. அதன் விளைவாகத் தோன்றும்சமூக இசைவாக்கம் இவற்றின் விளைவு என எதிர்பார்க்கப்படுகிறது. நாட்டு வளர்ச்சியின் அடித்தளம் தேசிய ஒருமைப்பாடாகும். இதற்கான ஒரே வழி விழுமியக் கல்வியே என வலியுறுத்தப்படுகிறது.

விழுமியக் கல்வியை வழங்கும் வழி வகைபற்றி ஆணைக்குழு விரிவாக ஆராய்ந்துள்ளது. முன்னைய காலங்களில் ஒருவரிடம் வளர்ந்துள்ள சகிப்புத்தன்மை (Tolerance) பரஸ்பரம் ஒருவர் மீது ஒருவர் காட்டும் பரிவு இவைமட்டுமே சமூக வாழ்வை செம்மைப்படுத்தப் போதுமானதெனக் கருதப்பட்டது. ஆனால் இன்றோ நவீன ஆயுதங்களும், துரித போக்குவரத்துச் சாதனங்களும் நவீன தொடர்பு சாதனங்களின் வளர்ச்சியும் தனி மனித விழுமியங்களைப் பெருமளவு பாதித்துள்ளன. இன்றைய சமூக வாழ்வு முரண்பாடு களைதல் (Conflict Solving) சமூக இசைவாக்கம் (Social Adjustment) பெறுதல் சாதாரண வாழ்வு என மூன்று நிலைகளினூடே அமைந்துள்ளது. இந் நிலைக்கேற்ப விழுமியக் கல்வி திட்டமிடப்பட்டு வழங்கப்பட வேண்டும்.

## ஒழுக்கம் அவசியமானது

விழுமியங்களை எதிர் கால சந்ததியினரிடம் உருவாக்குவதில் பாடசாலைகளின் பொறுப்பும், பங்கும் அதிகரித்துவிட்டது. இன்றைய மாணவத் தலைமுறையினரிடம் ஒழுக்க விழுமியங்கள் அருகி வருகின்றதை சமூகம் நன்கு புரிந்திருக்கிறது. ஆனால் தமது சொந்தப் பிள்ளைகள் அறவிழுமியங்களிலிருந்து தூர விலகியிருக்கின்றனர் என்பதை ஒப்புக்கொள்ளும் நேர்மை எந்தப் பெற்றோரிடமும் காணப்படவில்லை. வழங்கப்பட வேண்டிய கல்வி பற்றிய பெற்றோரின் எதிர் பார்ப்பும் அதற்காக அவர்கள் செலுத்தும் அழுத்தமுமே இத்தகைய இழி நிலைக்குக் காரணம் என்பதை எந்தப் பெற்றோரும் உணர்வதாக இல்லை. தமது பிள்ளைகளுக்கு கல்வி வழங்குவதில் வேண்டாத சிரத்தை காட்டும் பெற்றோர் எத்தகைய கல்வி அவர்களுக்கு உகந்தது என்பதில் தெளிவு பெற்றவர்களாக இல்லை.

## உள்ளத் தேவைகள் உணரப்படவேண்டும்

மாணவர்களின் மனஉந்தல்கள், தேவைகள் என்பதை ஆசிரியர்களும் அறிந்திருக்கவில்லை. அறியும் முயற்சிகளைதையும் அவர்கள் மேற்கொள்ளவுமில்லை. இதன் விளைவு தான் மாணவர்கள் ஆசிரியர்கள் மீது மதிப்பு வைக்காத தன் காரணமாகும். கல்வி நிர்வாகிகளும் ஆசிரியர்களது உள்ளத் தேவைகளையும் ஆசிரியர் பிரச்சினைகளையும் விளங்கிக் கொள்ளவில்லை. இதன் விளைவாகவே கல்விக் கோட்பாடுகள் அடிக்கடி மாறுகின்றன. கல்விச் சீர்திருத்தங்கள் அடிக்கடி நிகழ்வதால் கல்வி பற்றி நிச்சயமற்ற தன்மையும் உறுதியின்மையும் அதனால் விளையும் அவல நிலையையும் சமூகம் எய்துகிறது. இதனைக் கருத்தில் கொண்டு தேசிய கல்வி ஆணைக்குழு கல்வி செயல் வடிவத்தில் மாற்றம் ஏற்படுவதை உறுதியான கருமமாகக் கொண்டுள்ளது.

இன்றைய கல்வி பெருமளவு விடய அறிவுக்கும் ஓரளவு விவேகத்திற்கும் இடம் அளித்துள்ளது. மாணவர்கள் கள்ளம் கபடமற்றவர்கள். உளவிருத்தி பெறவேண்டியவர்கள். அவர்களைச் சரியான பாதையில் இட்டுச் செல்வது ஆசிரியர், பெற்றோர், கல்வி வழங்குநர் என்போரின் பொறுப்பாகும். மாணவரிடையே ஒழுக்க விருத்திக்கு முதலிடம் அளிப்பதன் மூலமே கல்வியினால் எய்தப்பட வேண்டிய விழுமிய மேம்பாட்டினை எய்த முடியும்.

அறிவு, திறன் மனப்பாங்கு என்று விநாடி தோறும் அசைபோடும் எவரும் வினைத்திறன், மனப்பாங்கு என்பவற்றின் செயலாக்கம் கருதிச் செயற்படவில்லை. எனவே புதிய கல்விச் சீர்திருத்தம், செயற்றிறன், விழுமியம் என்பவற்றுல் ஆழ்ந்த கவனம் செலுத்துகிறது.

## வன்முறை உணர்வு வளர்தல்

சகிப்புத் தன்மை தொடர்பான மனப்பாங்குகளைப் புகட்டல் விழுமியக் கல்விச் செயற்பாடாக முன்வைக்கப்பட்டுள்ளது. மாணவர்கள் மனதில் ஒத்திசைவான கூட்டு வாழ்க்கைக்கான உரியதொரு சிந்தனை வளர்ச்சிக்கு வித்திடப்பட வேண்டும். இன்றைய கல்விப்போக்கு ஏனையோரின் குற்றங்களையும், குறைபாடுகளையும் கடுமையாகக் கண்டிக்கும் அதேவேளை அத்தகையோருக்கு உதவக்கூடிய நற்பண்புகளை வளர்க்கும் நிலையிலில்லை. மாணவன்தன்னைச் சமூகம் ஒறுப்பதாகவும், சமூகத்தினால் தான் நலிவுறுத்தப்படுவதாகவும் எண்ணுகிறான். இதன் காரணமாகப் பிரிவினைப் போக்குகளினால் உந்தப்பட்டு வன்முறையை நாடும் உணர்வினனாகக் காணப்படுகிறான். இத்தகைய போக்குகள் இனங்காணப்பட்டு அவற்றிலிருந்து பிள்ளைகளைக் காப்பாற்றும் வகையில் விழுமியக்கல்வி அமையவேண்டும்.

இதற்கான செயற்பாடுகள் பற்றி ஆணைக்குழு கருத்துக்களைமுன் வைத்துள்ளது. பாடசாலைக்கு அனுமதிக்கப்படும்சிறார்கள்பாடசாலைக் காலம் முழுவதும் ஆசிரியர்களின் தனிப்பட்ட நேரடிக் கண்காணிப்பில் ஒப்படைக்கப்படுவர். ஒரு ஆசிரியர் சராசரி 30 சிறார்களை நேரடியாகப் பொறுப்பேற்க வேண்டும். சிறார்களின் குடும்பப் பின்னணி உளவியல், சமூகக் காரணிகள் இவற்றைக் கருத்திற் கொண்டு சிறார்களை அவதானத்துடன்வழி நடத்தி விழுமியச்செயலூக்கத்தை ஏற்படுத்த வேண்டும். பிள்ளை வளர்ச்சி அடைவு தொடர்பான பதிவுகளைப் பேணல் ஆசிரியரது பொறுப்பாகும். தமக்கு ஒதுக்கப்பட்ட ஆசிரியரை மாணவர் ஒழுங்காகச் சந்தித்தல் வேண்டும். ஆசிரியர் நாளொன்றிற்கு சராசரி இருமாணவர்களைச் சந்தித்தல் வேண்டும். மாணவரது வேலை பற்றிக் கலந்து பேசி கருத்துக்களைக் கூறி தகுந்த வழிகாட்டல் வழங்கப்பட வேண்டும். இத்தகைய நெருங்கிய உறவு மாணவரை முன்னேற்றுவது மட்டுமல்லாமல் ஆசிரியருக்கு நற்பயன்களை ஏற்படுத்தி அவர்தம்மைச்சீர் திருத்த உதவும்.

ஒரேசெயற்பாட்டில் ஆசிரியரது விழுமியம் பேணப்படுவதுடன் மாணவர்கள் அறநெறி விழுமியங்களூடாக வளரும் வகையில் வழி நடாத்தப்படுவர்.

மனிதாபிமான அக்கறையும், கவனமும் தேவைப்படுகின்ற நோயாளர் குறைபாடுடையவர், உறுதியற்றோர், பலவீனமானவர்கள் ஆகியோரை அசட்டை செய்யும் மனப்பாங்கை அகற்றி விழுமிய சமூகத்தைக் கட்டியெழுப்ப சமூகத்தின் அனைத்து உறுப்பினர்களும் ஒன்றிணைந்து செயலாற்ற வேண்டியது அவசியமாகும்.

## சில செயற்பாடுகள்

இதற்கான பாடசாலையின் நாளாந்த செயற்பாடுகள் திட்டமிடப்பட வேண்டும். காலைக் கூட்டம் (General Assembly) காலைப் பிரார்த்தனை ஒழுங்கு முறையில் செயற்றிட்டமாக வகுக்கப்படவேண்டும். இன்றைய காலைக் கூட்டங்களும், பிரார்த்தனைகளும் பொருள் பொதிந்ததாக இல்லை. சமயச் சகிப்புத் தன்மை அல்லது சர்வமத நேயம், மனித நேயம் ஒருவருக் கொருவர் உதவுதல், அன்புடன் கூடிய செயற்பாடு, பிறருக்குப்பயன்பட வாழ்தல், பிறர் குற்றங்களைமன்னித்தல்போன்ற கருத்துக்களுக்கு கூடிய அழுத்தங்களை இத்தகைய வேளைகளில் வழங்கும் வகையில் திட்டமிடப்பட வேண்டும். தியானம், மனஅமைதி பெறல் இவற்றிற்கானநாளாந்தபயிற்சிகள்வழங்கப்பட வேண்டும்.

சாரணீயம் மிக அத்தியாவசியமான விழுமியச் செயற்பாடாக அமையும் என்று ஆணைக்குழு கருதுகிறது. சமூக இசைவாக்கம் இதனூடாக எய்தப்பட முடியும்.

விளையாட்டு உடல் நலக் கல்வி விழுமியங்களை வளர்க்கும் வகையில் அமைக்கப்பட வேண்டும். வெற்றியை அடைவது மட்டுமே குறிக் கோளாகக் கொண்டு உண்மையைப் புறக்கணிக்கும் வகையில் இத்தகைய கல்விச் செயற்பாடு இன்று பாடசாலைகளில் நடைமுறையிலுள்ளது. உடற்கல்வி பரிசில் பெறும் நோக்கத்துடன் போட்டி விளையாட்டுக்களிலும் ஆட்டங்களிலும் பங்கு பெறுதல் என்றொரு தவறான கருத்து நிலவுகிறது. நேர்மை வெற்றி தோல்வியை மதிக்கும் மன உணர்வு மனோதிடம்போன்ற நற்பண்புகள் உடல் நலக் கல்வி ஊடாக வளர்க்க முடியும். உறுதியான உள்ளத்தை வளர்ப்பதால் (Spritual Values) தெய்வீக விழுமியங்களை எய்த வைக்க முடியும்.

பாடசாலையுடன் மாணவரை நெருக்கமான ஈடுபாட்டை (Attachment) வளர்க்கும் வகையில் விழுமியச் செயற்பாடுகள் சூழ்நிலைக்குகந்த வகையில் அமைக்கப்பட வேண்டும் பாடசாலைக் கொடி, சின்னம், மகுட வாசகம் என்பவை பற்றி புனித உணர்வு பெற வழிவகுக்கப்பட வேண்டும்.

# இராசி பலன்

4-11-2000
(ஐப்பசி 19, சனி)
அட்டமி பி இ 12 38 வரை, திருவோணம் மு.இ. 10.09 வரை
ராகுகாலம் 9.04- 10 34
சுபநேரம் 3.04. 4.34
சித்தம், கோஸ்டாஸ்டமி

**மேடம்**
தொழில் அதிகாரம், பெரியோர் சந்திப்பு, காரிய அனுகூலம், பணியாளர் உதவி.

**இடபம்**
சிறுவியாதி, மனம் அமைதிக்குறைவு, பிரயாணம், முயற்சி தாமதம்.

**மிதுனம்**
பிரயாண அலைச்சல், தேவையற்ற பிரச்சினையில் மாட்டிக் கொள்ளல், சுகக் குறைவு.

**கடகம்**
மதிக்கப்படுதல், சுவாரஸ்யம், பிரயாணம், காரிய ஜெயம்.

**சிங்கம்**
எதிரிகளால் நன்மை, காரிய அனுகூலம், உடல் நலம், தன வரவு.

**கன்னி**
காரியத் தாமதம், உடல் உபாதை, புத்திரர்களால் கவலை, தாழ்வு நிலை.

**துலாம்**
உஷ்ண ரோகம், தன்னம்பிக்கையின்மை, காரிய தாமதம், பயந்த சுபாவம்.

**விருச்சிகம்**
பிரயாணம், முயற்சி கைகூடும், சகோதரர் உதவி, சுவாரஸ்யம்.

**தனுசு**
மதிப்புக்குறைதல், விதண்டாவாதம், முயற்சி தாமதம், தனவிரயம்

**மகரம்**
போசன சுகம் காரியம் கை கூடும். ஆரோக்கியம் புதிய சிந்தை

**கும்பம்**
பிரயாணம், சுபகாரியச் செலவு. முயற்சி தாமதம், அமைதியின்மை.

**மீனம்**
கீர்த்தி, காரியஅனுகூலம், மகிழ்ச்சியான சம்பவம் தன வரவு.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

# அதிபரை இடமாற்றக் கோரும் மாணவர் பகிஷ்கரிப்பு தொடர்கிறது

(வவுனியா)

வவுனியா தமிழ் மகா வித்தியாலய மாணவர்களின் பகிஷ்கரிப்பு போராட்டம் தொடர்ந்து இடம்பெற்று வருவதாக வவுனியா செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த நான்கு வருடகாலமாக இப்பாடசாலையில் கடமையாற்றும் அதிபரது நடவடிக்கைகள் மாணவருக்கு திருப்தி தராமையை அடுத்தே அவரை இடமாற்றம் செய்யுமாறு கோரி மேற்படி பகிஷ்கரிப்பு நடவடிக்கை இடம் பெற்று வருவதாக மேலும் அறியப்படுகிறது.

தாம் பகிஷ்கரிப்பில் ஈடுபடப்போவதாக ஒரு வாரத்திற்கு முன்பே மாணவர் கல்விப்பணிப்பாளருக்கு அறிவித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளையில் வடக்கு-கிழக்கு மாகாண கல்விப்பணிப்பாளருடைய பிரதிநிதிகள் அடங்கிய குழுவினர் இப்பகுதி நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்களை சந்தித்து பேச்சு வார்த்தை நடத்திக் கொண்டிருப்பதாகவும் நேற்றைய தகவல்கள் தெரிவிக்கின்றன.

சுமுகமான முடிவுகள் எதுவும் எடுக்கப்பட்டதாக தகவல் இல்லை. (க)

# யுத்தப் பகுதியில் இருந்து வயோதிபர்கள் மீட்பு

(தென்மராட்சி)

யுத்தம் நடைபெறும் தென்மராட்சிப் பகுதியில் சுமார் ஆறு மாத காலம் தனிமையில் வசித்து வந்த இரு வயோதிபர்களை அங்கிருந்து பாதுகாப்புப் படையினர் மீட்டு நேற்று முன்தினம் இரவு மந்திகை மருத்துவமனையில் சேர்த்துள்ளனர்.

மட்டுவில் வடக்கு மானாவளையைச் சேர்ந்த முருகன் சின்னத்தம்பி (வயது 78) மட்டுவில் வடக்கு முத்துமாரி கோவில் வீதியைச் சேர்ந்த இளைப்பாறிய தபால் அதிபரான கார்த்திகேசு பதஞ்சலிநாதன் (வயது 70) ஆகிய இருவருமே படையினரால் மீட்கப்பட்டவர்களாவர்.

(க-77)

# கல்விப் பொதுத் தராதரப்பத்திர சாதாரணதர மாதிரிப் பரீட்சை - 2000

## கர்நாடக சங்கீதம் - பகுதி - 1

நேரம்:- 1மணி

ஆக்கம்:- திருமதி கு. உருத்திரகுமாரன்
ஆசிரியை
(யாழ் கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயம்)

**சரியானது அல்லது மிகப் பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.**

1) தமிழிசையில் ஸ்தாயியைக் குறிக்கும் பெயர்?
1) சுருதி 2) கேள்வி 3) எல்லை 4) தாரம்

2) ஸாரீ, என்னும் ஸ்வரக் கோர்வையில் உள்ள அட்சர காலங்களின் எண்ணிக்கை?
1) 5 2) 6 3) 7 4) 4

3) காக பாதத்திற்கு உரிய குறியீடு
1) | 2) + 3) × 4) O

4) சுருதியின் மறுபெயர்
1) ஸ்வரம் 2) கேள்வி 3) நாதம் 4) விளரி

5) ஆவர்த்தன முடிவைக் காட்டும் குறி
1) | 2) = 3) ‖ 4) /4

6) தாளம் தொடங்குமுன் பாட்டு ஆரம்பிக்கும் எடுப்பு
1) அனாகத எடுப்பு 2) ஸம எடுப்பு 3) அதீத எடுப்பு 4) விசமம்

7) பதினாறு அட்சரங்களையுடைய தாளம்
1) மிஸ்ரமட்ய தாளம் 2) சதுஸ்ரமட்ய தாளம்
3) மிஸ்ரதுருவதாளம் 4) கண்டதுருவதாளம்

8) சங்கீர்ணஜாதி துருவ தாளத்திற்குரிய மொத்த அட்சரகாலங்கள்
1) 28 2) 27 3) 25 4) 29

9) நாயக நாயகி பாவம் கொண்ட உருப்படி
1) கீதம் 2) ஜதீஸ்வரம் 3) பல்லவி 4) பதம்

10) வர்ணத்தின் உபபல்லவி எனப்படும் அங்கம்
1) சரணம் க) பல்லவி 3) அனுபல்லவி 4) முத்தாயிஸ்வரம்

11) ஜதிகள் நிறைந்த பதவர்ணத்தின் மறுபெயர்
1) ஆடவர்ணம் 2) சௌகவர்ணம் 3) பதஜதிவர்ணம் 4) பதவர்ணம்

12) காம்போதி ஓர்
1) ஔடவராகம் 2) பாஷாங்கராகம்
3) ஷாடவராகம் 4) உபாங்கராகம்

13) மோகனத்தின் தாய் இராகம்
1) 28-வது மேளம் 2) 29-வது மேளம்
3) 30-வது மேளம் 4) 25-வது மேளம்

14) பூர்வ மேளகர்த்தாக்களில் உள்ள சக்கரங்கள்
1) 5 2) 6 3) 7 4) 8

15) ஸரிகபதஸ் — ஸ்நிதபமகரிஸ என்னும் ஆரோகண-அவரோகணத்தையுடைய இராகம்
1) ஆரபி 2) கேதாரகௌளை 3) காம்போதி 4) பிலகரி

16) சதுர்தண்டி பிரகாசிகை என்னும் நூலை இயற்றியவர்
1) கோவிந்தாசாரியார் 2) வெஸ்கடமகி
3) தியாகராஜ சுவாமிகள் 4) சியாமாசாஸ்திரிகள்

17) மாது எனப்படுவது
1) சாகித்தியம் 2) தாளம் 3) ஸ்வரம் 4) அங்கம்

18) 4-வது சக்கரத்தின் பெயர்
1) இந்து 2) வேத 3) பாண 4) திசி

19) கல்யாணி இராகத்தின் சக்கரம்
1) ருத்ர 2) பிரக்ம 3) ஆதித்ய 4) வஸு

20) எல்லா ஸ்வரங்களும் கோமள ஸ்வரங்களாக வரும் இராகம்
1) சங்கராபரணம் 2) மாயாமாளவகௌளை
3) கல்யாணி 4) தோடி

(நாளை தொடரும்)

### பிரபல திருடர் கோஷ்டித்தலைவன்

# போளைக்கண்ணன் கைதானார் மேலும் பலர் கைதாகலாம்

## சுன்னாகம் பொலிஸார் நம்பிக்கை

(சுச்சமோட்டை)

பல திருட்டுச் செயல்கள் தொடர்பாக நீண்ட நாட்களாக பொலிஸாரினால் தேடப்பட்டு வந்த ''போளைக் கண்ணன்'' என்ற திருடனை சுன்னாகம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சுன்னாகம் மற்றும் அதனை அண்டிய பகுதி மக்களுக்கு மிகுந்த அச்சத்தையும், அச்சுறுத்தலையும் கொடுத்து வந்த மேற்படி ''போளைக் கண்ணன்'' என்ற திருடனையும், 'ஒற்றைக்கையன்' என்றழைக்கப்படும் திருடனையும் கைது செய்வதற்கு ஏதுவாக அவர்களது படங்களை வெளியிட்டு பொலிஸார் தேடிவந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த புதன்கிழமை, வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் பின்னாலுள்ள வீடொன்றில் பகல்வேளை போளைக் கண்ணன் நித்திரையில் இருந்த சமயம் பொது மக்கள் கொடுத்த தகவலின் பேரில், அவ்விடத்தை சுற்றி வளைத்து பொலிஸார் இவரை கைது செய்ததாக தெரியவந்துள்ளது.

இதேவேளை, போளைக் கண்ணன் கைதாகியிருப்பதையடுத்து ஒற்றைக் கையன் மற்றும் இவரின் கீழ் தொழில் புரிந்து வந்த கள்வர்கள் பலர், அகப்படலாம் என நம்பப்படுகிறது. (உ-59)

# வாகன விபத்தில் நான்கு பேர் பலி!

(கொழும்பு)

ஆனமடுவ ஊரியாவலஎன்னுமிடத்தில் நேற்று முன் தினம் இடம் பெற்ற வாகன விபத்தொன்றில்ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரு குழந்தைகள் உட்பட நால்வர் உயிரிழந்துள்ளனர்,

வீதியோரமாக நடந்து சென்று கொண்டிருக்கையில் எதிர்ப்புறத்திலிருந்து வேகமாகவந்தகொள்கலன்ஏற்றிய வாகனமொன்று மோதியதிலேயே இந்தப்பரிதாப சம்பவம் இடம் பெற்றது.

இந்த விபத்தில் உயிரிழந்த இருகுழந்தைகள் உட்படபெற்றோரின் சடலங்களும் ஆனமடுவ வைத்தியசாலைப் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது, (ந-5)

# அரியாலை நபர் ஆஸ்பத்திரியில் அனுமதி

(யாழ்ப்பாணம்)

வீட்டில்தனிமையில் இருந்த வேளை மூர்க்கத்தனமாக வெட்டப்பட்ட சம்பவம் ஒன்று அரியாலைப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

வெட்டுக்காயங்களுக்குள்ளாகியநபர்யாழ் போதனாவைத்தியசாலையின் தீவிரசிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருகிறார்.

பொன்னையா பஞ்சலிங்கம் (வயது 63) என்பவரே வெட்டுக்காயத்திற்கு உட்பட்டவராவார்.

பிரஸ்தாப நபர் ஒருகால மாதங்களுக்குமுன் வவுனியாவில் இருந்து தமது அரியாலை வீட்டிற்கு வந்தவர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க-22)

# விசேட பாடங்களுக்கு 49 பேர் அனுமதி

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தின் கலைப்பீட 2000/2001 ஆம் கல்வியாண்டில் விஷேட பாடங்களின் அனுமதியின் கீழ்மொழியியலுக்கு35மாணவர்களும் சமஸ்கிருதத்திற்கு 14 மாணவர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இந்த மாணவர்களின் பெயர்விபரங்களை யாழ்.பல்கலைக்கழககலைப்பீட விளம்பரப் பலகையில் பார்வையிடலாமென்றும் இவர்கள் தமது பதிவுகளை விரைவில் மேற்கொள்ளுமாறும் யாழ்.பல்கலைக்கழகதுணைவேந்தர் பேராசிரியர்பொ.பாலசுந்தரம்பிள்ளை கேட்டுள்ளார். (ந-ஸ்ரீ)

# புதிய அமைப்பு ஒன்று மட்டு நகரில் உதயம்

(மட்டக்களப்பு)

தமிழர் அடிப்படை உரிமைகள் மீறப்படுவதைத் தட்டிக்கேட்பதற்கெனதமிழர்வெகுஜன அமைப்புஎன்ற பெயரில்மட்டுநகரில்அமைப்பொன்றுஆரம்பிக்கப்பட்டுள்ளது

இதில்பல்கலைக்கழக மாணவர்கள், விரிவுரையாளர்கள், தொழிநுட்பக்கல்லூரி மாணவர்கள். விரிவுரையாளர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப்பலரும் இணைந்துள்ளனர்.

ஆர்வம் உள்ள அனைவரும் இவ் அமைப்பில் இணைந்து கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது, (உ-60)

# ஹர்த்தால் நிகழ்வை கண்டித்து மட்டு நகரில் துண்டுப்பிரசுரம்

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு நகரில் அடிக்கடி இடம்பெற்றுவரும் ஹர்த்தாலை கண்டித்து அங்கு பரவலாக துண்டுப்பிரசுரம் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

அன்பான தமிழ் மக்களே என விழித்து எழுதப்பட்டுள்ள இத்துண்டுப் பிரசுரத்தில், அடிக்கடி இடம்பெற்ற இக் ஹர்த்தால் மூலம் சாதித்தது என்ன? பெற்ற உரிமை தான் என்ன? என வினாவெழுப்பப்பட்டுள்ளது.

குறுகிய அரசியல் லாபம் தேடும் சந்தர்ப்ப வாதிகளினதும், பகிரங்கமாக தம்மை இனம் காட்டாதவர்களும் அழைப்பு விடுக்கும் ஹர்த்தாலுக்கு துணைபோகாதீர்கள் எனவும் அத்துண்டுப் பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அன்றாடம் உழைத்து வாழ்க்கை நடத்தும் 70 வீதமான மக்கள் இக் ஹர்த்தால் நிகழ்வுகளால் பாதிக்கப்பட்டிருப்பது குறித்தும் இத்துண்டுப்பிரசுரத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளையில் கடந்த ஒருவாரத்தில் மட்டும் மூன்று ஹர்த்தால் நிகழ்வுகள் மட்டக்களப்பில் இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. (க-உ

# அமைச்சர் டக்ளஸ் பிரதமரிடம் கோரிக்கை

(கொழும்பு)

மலையக மக்கள்முன்னணி தலைவரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பெ. சந்திரசேகரனை உடனடியாக விடுதலை செய்யுமாறு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்காவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை மாலை பிரதமரைச் சந்தித்துப்பேசிய வேளையிலேயே மேற்படி கோரிக்கையை விடுத்திருப்பதாய் தெரியவந்துள்ளது.

அத்துடன் அச்சம் மற்றும் பாதுகாப்பின்மை காரணமாக இடம்பெயர்ந்து பொது இடங்களில் தங்கியிருக்கின்ற மலையக மக்களை சொந்த இடங்களுக்குத் திரும்ப நடவடிக்கை எடுக்குமாறும் கலவரங்களால் கடைகள் எரிக்கப்பட்டும் சொத்துக்கள் நாசம் செய்யப்பட்டும் பாதிப்புற்ற பொதுமக்களுக்கு நஷ்டஈடு வழங்க உடன் நடவடிக்கை எடுக்குமாறும் இச் சந்திப்பின்போது டக்ளஸ் எம். பி. கோரியுள்ளார். (உ)

## இன்று ஒரு தகவல்

### "பணிந்து கற்கும் கல்வி நிமிர்ந்து வாழ வைக்கும்"

முற்காலத்தில் 'பாண்டியன், ஆரியப்படை, கடந்த நெடுஞ்செழியன்' என்று பெயன்ர் உடைய ஓர் அரசன் இருந்தான். கல்வியின் சீரும் சிறப்பும் அவனுக்கு நன்றாக் விளங்கின. அவன் தானும் நன்றாகக் கல்வி கற்றுப் பூவேந்தனாக இருப்பதோடு பாவேந்தனாகவும் இருக்க விழைந்தான்.

பெரும் புலவராக விளங்கும் நல்லாசிரியர் ஒருவரைத் தேடிப் பிடித்தான். அவ் ஆசிரியருக்கு ஆகவேண்டிய உதவிகளை எல்லாம் செய்து அவரிடம் ஒழுங்காகவும், வரன் முறையாகவும் கல்வி பயின்றான்.

தன்னுடைய ஆசிரியருக்கு ஏதேனும் தொல்லையேற்பட்டால் விரைந்துதீர்ப்பான் அவ்வாசிரியருடைய செலவுக்குதாராளமாகப்பொருள் கொடுப்பான். அவரிடம் அடக்கமாகவும், பணிவுடனும் நடந்து கொள்வான். ஆசிரியரிடம் பணிந்து நிற்பதற்குச் சிறிதும் பின்வாங்க மாட்டான்.

தான் ஓர் அரசனாயிற்றே என்று எண்ணி ஆணவமாக ஆசிரியரிடம் நடந்து கொள்ள மாட்டான்.

நூல்களில் மாணவருக்குக் கூறப்பட்ட முறைப்படி அவன் ஆசிரியரிடம் அமைந்து நடந்து கல்வி கற்றுக்கொண்டிருந்தான்.

அரசன் புலவரிடம் அவ்வாறு தாழ்ந்து நின்று கல்வி கற்பது சிலருக்குப் பிடிக்கவில்லை. அவர்கள் ஒருநாள் அரசனைத் தனியிடத்திலே கண்டு, 'தாங்கள் அளவு கடந்த அடக்கவொடுக்கத்துடன் ஆசிரியரிடம் அடங்கிக் கல்வி கற்கிறீர்களே, ஏன் அவ்வாறு செய்தல் வேண்டும்.

தாங்கள் ஓர் அரசன். அவ்வளவு தூரம் தாழ்ந்து போதல் பார்ப்பவர்களுக்கு நன்றாக இருக்காது, ஆகையால் இனிமேல் தாங்கள அரசனாகவே இருங்கள். இவ்வாறு தொல்லைப்பட்டுக் கற்கின்ற கல்வியினால் அப்படி என்ன பெரிய நன்மை விளைந்து விடப்போகிறது? என்றுகூறி அரசனுடைய உள்ளத்தைக் கலைத்துக் கெடுக்கப் பார்த்தார்கள்.

அவர்கள் கூறியவற்றைக் கேட்ட அரசன் அவர்களுடைய அறிவின்மையை எண்ணி வருந்தினான். அவர்களுக்கு நல்லறிவு புகட்ட எண்ணினான். அவன் அவர்களைப் பார்த்து, 'நீங்கள் கூறிய மொழிகள் நல்லவையல்ல நீங்கள் கல்வியின் பெருமையைச்சிறிதும்உணராதவர்களாக இருக்கின்றீர்கள். கல்வியின் சிறப்பு சொல்லுதற்கரியது. தன் குருவிற்கு ஒரு துன்பம் வந்த பொழுது அது நீங்குவதற்கு ஆவனசெய்தல் வேண்டும்.

பிறப்பு ஒரே தன்மையராய் இருந்தாலும் கல்வியே உயர்ச்சியை ஏற்படுத்துகிறது. கல்வியின் பெருமை சிறிதும் உணராமல் குறுகிய நோக்கம்கொண்டுபேசுகின்றீர்கள். இது உங்களுக்குக் கூடாது என்றான்.

நெடுஞ்செழியனனுடைய மொழியைக் கேட்டோர், அரசனுடைய உள்ளப்பண்பு தெரியாமல் பேசினோமே என்று வருந்தினர். அரசனோ மிகமுயன்று கல்வியை நன்கு கற்றுத் தேர்ந்தான். செய்யுள் பாடுந் திறமையையும் அடைந்தான்.

நன்றி

இலக்கிய சிறுகதை

## உடற்கல்வி மாணவர்கள் ராக்கிங்கில் மும்முரம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக, உடற்கல்வி டிப்ளோமா கற்கை நெறியின், புகுமுக மாணவர்கள் மீது அதே துறையைச் சேர்ந்த சிரேஷ்ட மாணவர்கள் 'ராக்கிங்' கொடூரம் புரிந்துவருகின்றனர்.

யாழ். பல்கலைக்கழக ஆண்கள் (பாலசிங்கம்) விடுதிக்கு அருகாமையிலுள்ள உடற்கல்விவிரிவுரை மண்டபத்துக் கருகில்நேற்றுமுன்தினம் நண்பகல்12-30மணியளவில்இடம் பெற்ற 'ராக்கிங்' சம்பவமொன்றில் வேப்பங்குழையைத் தலையில் வைத்தவாறு ஒற்றைக்காலில் நிற்கும்படி' புகுமுக மாணவன் ஒருவரை பணித்தனர்.

இதேவேளை உடலெங்கும் தண்ணீரால் தெளித்தும், தகாத வார்த்தைகளால் ஏசியும் சிரேஷ்ட மாணவர் புரிந்துவரும்'ராக்கிங்' கொடூரமானது புகுமுக மாணவர்களை உடல் உளரீதியாகப் பாதித்துள்ளது.

சிரேஷ்ட மாணவ மாணவிகள் புரிந்துவரும் இக்கொடூரத்தால் புகுமுக மாணவர்கள் மிகுந்த அச்சத்துடன் விரிவுரைகளுக்கு சமுகமளிப்பதைஅவதானிக்கமுடிகிறது.

(ந-ஸ்ரீ)

## வாக்குகள்எதுவும்பெறாது வேட்பாளர்[ ] சாதனை

(மட்டக்களப்பு)

நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிட்ட 83 வேட்பாளர்கள் ஒரு வாக்கைக்கூட பெறாமல் அரியசாதனை புரிந்துள்ளனர்.

இம்மூவரும் சுயேட்சைக் குழு 4 சார்பாக போட்டியிட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

றுகுணு மக்கள் கட்சி, சுயேட்சைக்குழு4 சார்பாகப் போட்டியிட்ட தலா4 வேட்பாளர்களும் புதிய ஜனநாயக் கட்சி, ஐக்கிய தேசியக்கட்சி ஆகியவை சார்பாகப் போட்டியிட்ட தலா ஒவ்வொரு வேட்பாளர்கள் ஒவ்வொரு வேட்பாளர்களுமாக மொத்தம் 10 வேட்பாளர்கள் ஒவ்வொரு வாக்கு பெற்றிருப்பதும் தெரிய வந்துள்ளது.

அத்துடன், 5கட்சிகளைச் சேர்ந்த 7 வேட்பாளர்கள் தலா இரண்டு வாக்குகளைப் பெற்றுள்ளனர்.

றுகுணு மக்கள் கட்சி, லிபரல் கட்சி சார்பாகப் போட்டியிட்ட இரு வேட்பாளர்களும் பூமி புத்திர சிஹல உறுமய, சுயேட்சைக்குழு-5 சார்பாகப் போட்டியிட்ட தலா ஒரு வேட்பாளர்களுமே இவ்வாறு 2 வாக்குகளைப்பெற்றவர்களாவர்.

(உ-60)

### ம. ம. மு. தலைவர் கைதின் எதிரொலி

## கொந்தளிப்பு நிலையில் மலையகம்

## கண்டனக்குரல்கள் தொடர்கின்றன

### செயலர் சிவலிங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெ. சந்திரசேகரன் கைது சம்பந்தமாக முழு மலையகமும் கொந்தளிப்பான நிலையில் உள்ளது. நாட்டின் ஏனைய பகுதி தமிழ் மக்களும் தங்கள் கண்டனக் குரலை எழுப்பிய வண்ணம் உள்ளனர். இக்கைது சர்வதேசக் கவனத்தையும் ஈர்த்துள்ளது என அக்கட்சியின் செயலர் மு. சிவலிங்கம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்;

பண்டாரவளை படுகொலைகளுக்கு சம்பந்தமான இனவாத இயக்கங்களையும் சூத்திரதாரிகளையும் இது வரை கைது செய்து மக்கள் தொடர்பு சாதனங்களில் பகிரங்கப்படுத்தாமல் சாத்வீகமான முறையில் கண்டனக் குரல் எழுப்பிய சந்திரசேகரனை மட்டும் கைது செய்திருப்பது அரசின் பக்கசார்பையே காட்டுகிறது.

பண்டாரவளைபிந்துனுவெவ புனர்வாழ்வு முகாமில் தமிழ் இளைஞர்கள்படுகொலை செய்யப்பட்டதை எதிர்த்து சாத்வீகமான முறையில் ஒரு துக்க அனுஷ்டான நிகழ்ச்சியை தலவாக்கொல்லை நகரில் கடந்த ஞாயிற்றுக் கிழமை 29 ஆம் திகதிஏற்பாடு செய்திருந்தோம்.

இந்த நிகழ்ச்சி மலையகத்திலுள்ள சகல தொழிற்சங்கங்கள், அரசியற் கட்சிகள், சமூகநல மன்றங்கள் யாவரும் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்யப்பட்டதாகும்.

பண்டாரவளை படுகொலைக்குள்ளான ரொசிட்டா கொட்டகலையைச் சேர்ந்த சந்தனம் செல்வராசின் மரணச்சடங்கில் எங்களோடு கலந்து கொண்ட எம். எஸ். செல்லச்சாமிக்கு கொட்டகலை கலவரம் காரணமாக எங்களுடன் கலந்து கொள்ளமுடியவில்லை. செங்கொடிச்சங்கம் பொதுச் செயலாளர் ஓ. ஏ. ராமையா அவர்களிடம் நன் அழைப்பு விடுத்த போதும் அவராலும் வரமுடியவில்லை.

விஷமிகளின் பிரச்சாரங்களின்படி நாங்கள் இந்தநிகழ்ச்சியை இனரீதியிலான முறையில் ஏற்பாடு செய்யவில்லை. இந்த நிகழ்சியில் இனங்களின் ஒருமைப்பாடுபற்றியும் யுத்தத்தை நிறுத்துவதற்கான கோரிக்கைகள் பற்றியுமே பேசப்படவேண்டும் என்று ம. ம. மு. தலைவர் சந்திரசேகரன் எல்லோரையும் வலியுறுத்தியிருந்தார். அரசியல் சருத்துக்களிறந்த சோகங்களையும் சுலோகங்களையும் நாங்கள் தொழிலாளர்களுக்கு எழுதி வரும்படியும் வலியுறுத்தியிருந்தோம்.

இனவாத உணர்ச்சிகளைத் தூண்டிவிடக்கூடிய எந்த நிகழ்வுகளும் நடைபெறக் கூடாதென நாங்கள் உன்னிப்பாக விருந்தோம்.

ஆனால் இன்று பிள்ளையைக் கிள்ளிவிட்டு தொட்டிலை ஆட்டுவது போலவும், மீனுக்குத் தலையையும் பாம்புக்கு வாலையும் காட்டும் விலாங்கைப் போலவும் சில அசிரயல் வாதிகள் நடந்து கொள்வது எரியும் நெருப்பில் எண்ணெய்வார்ப்பது போல் இருக்கின்றது, என்று தெரிவித்திருக்கும் சிவலிங்கம் தங்கள் கட்சி உறுப்பினர்களை அமைதியாகவிருக்கும் படியும் வேண்டுகோள் விடுத்தார்.

(த)

### ஆர்ப்பாட்டம்

(மட்டக்களப்பு)

பலஸ்தீன முஸ்லிம்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் இஸ்ரேலியர்களின் இனப்படுகொலையைக் கண்டித்து தென்கிழக்கு பல்கலைக்கழக மாணவர்களால் நேற்று வெள்ளிக்கிழமை ஆர்ப்பாட்டப்பேரணி நடத்தப் பட்டது.

(உ)

### நாய்கள் அட்டகாசம்

(அரியாலை)

உடுவில் அம்பலவாணர் வீதி, ஆர்க்வீதிப் பகுதிகளில் நாய்களின் தொல்லை கடந்த சில மாதங்களாக அதிகரித்துக் காணப்படுகிறது: வீதியால்போகும்பொது மக்களை துரத்தியும் கடித்தும் இவை செய்யும் அட்டகாசங்களால் மக்கள் பெரும் கவலை அடைந்துள்ளனர்.

(106 - க)

### முக்கிய கருத்தரங்கு

(நல்லூர்)

நல்லூர் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட உணவு கையாளும் நிலையங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கு, சுகாதார கல்வி சம்பந்தமான நிகழ்வு ஒன்று, சமுதாய மருத்துவதுறையால் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு கொக்குவில் உப-அலுவலக நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

(க-103)

### புத்தபிக்கு தற்கொலை

(கொழும்பு)

பண்டாரவளையில் பௌத்த பிக்கு ஒருவர் கடந்த புதன்கிழமை தற கொலைசெய்துகொண்டார்.

பண்டாரவளை தேவராஜ மகா விகாரையைச் சேர்ந்த பிக்கு ஒருவரே கழுத்தில் சுருக்கிட்டுத் தற்கொலை செய்தவராவார்.

பண்டாரவளைப் படுகொலைச் சப்பவத்திற்கும் இவரின் தற்கொலைக்கும் தொடர்பு இருக்கலாமெனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

(ந)

## அம்பாறையில் ஹர்த்தால் செயற்பாடுகள் ஸ்தம்பிதம்

(மட்டக்களப்பு)

அம்பாறை மாவட்டத்தில் சம்மாந்துறைப் பகுதியில் கடந்தவியாழனன்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டதுடன் ஆர்ப்பாட்ட ஊர்வலங்களும் இடம்பெற்றது.

முன்னாள் சமூக சேவைகள் பிரதியமைச்சரும், பாராளுமன்ற உறுப்பினருமான யு. எல். எம். முகைதீனுக்கு மீண்டும் பிரதியமைச்சர் பதவி வழங்கப்பட வேண்டும் எனக்கோரியே இக் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது

இதனால் சம்பந்தப்பட்ட பகுதியில் வழமையான பணிகள் ஸ்தம்பிதமடைந்து காணப்பட்டது.

(உ-60)

## அவசரகால நீடிப்புக்கு எதிராக வாக்களிக்கவும்

### ம.மா.த. மறுமலர்ச்சிக் கழகம் வேண்டுகோள்

(மட்டக்களப்பு)

அவசர காலசட்டம் நீடிப்பிற்கு எதிராக வாக்களிக்க வேண்டும் என மட்டக்களப்பு மாவட்ட தமிழர் மறுமலர்ச்சிக்கழகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

சகல தமிழ்க்கட்சிகளுக்கும், தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இது குறித்த வேண்டுகோளை மட்டக்களப்பு மறுமலர்ச்சிக்கழகம் அனுப்பி வைத்துள்ளது.

தமிழ்மக்களது வாக்குகளைப்பெற்று, அவர்களால் தெரிவுசெய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது தார்மீகப் பொறுப்பை உணர்ந்து தமிழ் மக்களின் மானசீக உணர்வுகளை மதிக்கவேண்டி இதனைச் செய்யவேண்டிய கடப்பாடு உள்ளதெனவும் சம்பந்தப்பட்ட சகலருக்கும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, தமிழர் விடுதலைக் கூட்டணி, ரெலோ ஆகியவை அவசரகால சட்ட நீடிப்புக்கு எதிராக வாக்களித்து வருவது குறிப்பிடத்தக்கது.

(உ)

## சட்டவிரோத சாராய உற்பத்தியை தடுக்க கிராம அலுவலர் முயற்சி

(யாழ்ப்பாணம்)

சட்டவிரோத சாராய உற்பத்தியை தடுத்து நிறுத்தும் துரித திட்டம்ஒன்றை இளவாலை கிராம சேவையாளர் மேற்கொண்டுள்ளார்.

இந்த நடவடிக்கைக்கு அக்கிராம இளைஞர்களும் சிறந்த ஒத்துழைப்பு வழங்கி வருவதாக இளவாலை கிராம சேவையாளர் எஸ். உலகநாதன் தெரிவித்துள்ளார்.

கள்ளச்சாரய உற்பத்தி தொழிலை புதிதாக ஆரம்பித்த நபர்ஒருவரை இனம் கண்டு அவரிடம் இருந்த சாராயங்களை அழித்ததுடன் இத்தொழிலில் ஈடுபடக் கூடாது என்றும் துரிதநடவடிக்கை குழுவினரால் அறிவுறுத்தப்பட்டுள்ளார்.

இச் சட்டவிரோத உற்பத்தியை மேற்கொள்ளும் பிரபல உற்பத்தியாளர்களுக்கும் மேற்படி குழுவினரால் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டதாக மேலும் அவர் தெரிவித்தார்)

(க-12.

# வேலையற்றோர் ஒன்று சேர்ந்து ஆர்ஜென்ரீனாவில் ஆர்ப்பாட்டம்

ஆர்ஜென்ரீனாவில் பல்லாயிரக்கணக்கான வேலையற்றவர்கள் ஒன்று கூடி நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் வீதிகளில் தடுப்புக்களைப் போட்டும், ரயர்களை போட்டுக் கொளுத்தியும் வாகன போக்குவரத்துக்களை தடை செய்தனர்.

அத்துடன் அரசிற்கெதிரான கோஷங்களை எழுப்பியவாறு நீண்ட ஊர்வலமாகச் சென்றனர்.

தொழில் வாய்ப்புக்களை வழங்குதல், மற்றும் உணவு, உடை என்பவற்றை வழங்கக் கோருதல் இவையே இவ்ஆர்ப்பாட்டத்தின் முக்கிய நோக்கமாகும். (உ)

# அணு குண்டை தயாரிக்க ஈராக் திட்டமாம்

(தெஹ்ரான்)

ஈராக் நாடு பூரணத்துவமான அணுகுண்டு தயாரிக்க திட்டமிட்டுள்ளது.

அணுகுண்டு தயாரிப்பதற்குத் தேவையான உபகரணங்கள் போதியளவு காணப்படுகின்ற போதிலும் இதற்கு அதிஅத்தியாவசியமான யுரேனியம் போதியளவு இல்லாமல் இருப்பது இவ் அணுகுண்டு தயாரிப்புக்கு பெரும் முட்டுக்கட்டையாக விளங்குவதாக ஈராக் அணுவாயுத உற்பத்திப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

தாம் தயாரிக்கத் திட்டமிட்டுள்ள அணுகுண்டினை ஏவுகணைகள் மூலம் கொண்டு சென்று உரிய இலக்கினைத் தாக்க முடியும் எனவும் அவர்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர். (உ)

# சம்பியன் பட்டத்தை தனதுபழைய மாணவனிடம் இழந்த சதுரங்க வீரர் இலண்டனில் சம்பவம்

உலகில் பிரசித்தி பெற்ற சதுரங்க (செஸ்) விளையாட்டு வீரரான ரஷ்யாவைச் சேர்ந்த ஹரிகாஸ் பரோவ் அவரது கிளாடினர் பாமிலியிடம் தோல்வியடைந்துள்ளார்.

நேற்று முன்தினம் இலண்டனில் நடைபெற்ற சதுரங்க போட்டியில் கடந்த 15 வருடங்களாக தக்க வைத்திருந்த சதுரங்க சம்பியன்பட்டத்தை காஸ்பரோ தனது மாணவனிடம் இழந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (வி)

# மனச் சாட்சிப்படி வாக்கு அளிக்கக் கோரும் வேட்பாளர்

காங்கிரஸ் கட்சியினர் தமது மனச்சாட்சியின் படி தலைவர் தேர்தலில் வாக்களிக்க வேண்டும் என்று இந்திரா கங்கிராஸ் தலைவருக்கு போட்டியிடும் ஜிதேந்திரப் பிரசாத் தெரிவித்தார்.

தமிழ் நாட்டிற்கு வருகை தந்து தலைவர் பதவிக்கு வாக்குத் தேடும் பிரசாரத்தில் ஈடுபட்ட பின் பத்திரிகையாளர்களுடன் உரையாடுகையில் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

இதேவேளை ஜிதேந்திரப் பிரசாத் தமிழ் நாடு வந்த போது காங்கிரஸ் முக்கிய உறுப்பினர்கள் வரவேற்க வரவில்லையென்றும் அவ்வேளை தமிழ்நாட்டில் ஙாககிரஸ் கட்சிக்கு வாக்களிப்பவர்களில் அநேகர் டில்லிக்குச் சென்று விட்டதாகவும் இந்த வேட்பாளர் வெறுங்கையுடன் சென்றார் என்றும் விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (து)

# அமெரிக்க ஜெனரல் சீனாவிற்கு விஜயம்

(பீஜிங்)

அமெரிக்க இராணுவ ஜெனரல் பீஜிங் சென்றுள்ளார்.

வட்டார மட்டத்திலான பதற்றத்தை குறைப்பதற்காக பயணமாகியுள்ள இவர் நீண்ட காலத்திற்குப் பின் சீனா செல்லும் முதல் இராணுவ அதிகாரியாவார்.

சீனாவில் இராணுவத் தளபதி மற்றும் இராணுவ அதிகாரிகளுடன் இவர் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்க ஜெனரல் சீன அரசியல் தலைவர்களையும் சந்தித்து உரையாடுவார் என்று தெரிவிக்கப்படுகிறது.

சென்ற ஆண்டு கொசாபாவில் சீன தூதரகத் தாக்குதலை அடுத்து ஏற்பட்ட முறுகல் நிலைக்குப் பின் இப்பொழுது தான் அமெரிக்க இராணுவ ஜெனரல் சீனா சென்றுள்ளமை என்பது குறிப்பிடத்தக்கது. (து)

# புலிகளின் ஆதரவாளன் என்பதில் நான் பெருமையடைகின்றேன்

## பழ. நெடுமாறன் தெரிவிப்பு

(புதுடில்லி)

நான் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆதரவாளன் என்பதை எப்போதுமே மறுத்ததில்லை. எப்யோதும் புலிகளின் ஆதரவாளன் என்று கூறுவதில் பெருமைப்படுகிறேன்.

இந்நிலைப்பாட்டில் எந்தக் காலத்திலும் எவ்வித மாற்றமும் இருக்காது என தமிழர் தேசிய இயக்கத்தின் தலைவரும் மக்கள் உரிமை கூட்டமைப்பின் அமைப்பாளருமான பழ. நெடுமாறன் தெரிவித்துள்ளார்.

அவர் இதுதொடர்பாக வெளியிட்ட அறிக்கையில்:

வீரப்பனுடன் பேச்சு நடத்த தான் அரசுத் தூதரகம் செல்லவில்லை. மக்கள் உரிமை கூட்டமைப்பின் அமைப்பாளர்என்ற வகையில் மனிதாபிமான உதவியாகவே பேச்சுக்களில் ஈடுபட்டேன்.

வீரப்பன் முன்வைத்த கோரிக்கைகளின் நியாயம் புரியாத சில அரசியல் தலைவர்களும், பத்திரிகையாளர்களும் அவனைக் கொச்சைப் படுத்தும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.

தமிழ் மக்களின் உரிமைகளுக்காகப் போராடி, அவர்களுக்கான சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுக்கும் வல்லமையும், உறுதிப்பாடும் விடுதலைப்புலிகளிடம் மட்டுமே உண்டு. அந்தவகையில்அவர்களுக்கு நான்தொடர்ந்தும் ஆதரவளிப்பேன் என்பதில் உறுதியாய் இருக்கிறேன் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நடிகர் ராஜ்குமார் விடுதலை தொடர்பாக சந்தன மரக்கடத்தல் வீரப்பனுடன் பேச்சுநடத்துவதற்கு பழ. நெடுமாறன். பேராசிரியர் கல்யாணி சுகுமார் ஆகியோர் நக்கீரன் போபாலுடன் காட்டுக்குச் சென்றிருந்தார்.

இது குறித்து தமிழக, கர்நாடக மாநிலங்களில் விடுதலைப்புலிகளின் ஆதரவாளர்களை வீரப்பனுடன்பேச்சு நடத்த அனுப்பியது தவறு என்ற கருத்து பரவலாக நிலவியது. இக்கருத்திற்கு பதிலளிக்கும் வகையிலேயே அவல மேற்கண்ட அறிக்கையை விடுத்தார். (க-2)

# வயது முதிர்ந்தபெண்மணி லண்டனில் மரணம்

(லண்டன்)

உலகின் மிகவயது முதிர்ந்த பெண்மணி தனது 115 வது வயதில் பிரிட்டனில்காலமாகி விட்டார்.

உலகின் வயது முதிர்ந்த பெண்மணி என கின்னஸ் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள இப் பெண்மணி பிரிட்டனைச் சேர்ந்தவர்.

இவருடைய பிறந்த தினத்திற்கு இன்னும் 6 வாரங்களே இருக்கையில் இம் மரணம் நிகழ்ந்துள்ளமை குறித்து பலரும் கவலை வெளியிட்டுள்ளனர். (செ)

# தாய்லாந்தில் சூறாவளி நாற்பத்தைந்து பேர் பலி

(பாங்கொக்)

தாய்லாந்தில் சூறாவளியோடு கூடிய மழையில் நாற்பத்தைந்து பேர் பலியாகி விட்டனர்.

இதில் நூற்றுக்கணக்கான வீடுகள் இடிந்து விட்டன. பன்னிரண்டு பேரைக்காணவில்லை. வீதியோரங்களில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த நூற்றுக்குமேற்பட்ட கார்கள் அடித்துச் செல்லப்பட்டுள்ளன.

கடந்த முப்பது வருடங்களுக்குப் பிறகு ஏற்பட்ட மிகப்பெரிய சூறாவளியோடு கூடிய மழை இதுவென்று காலநிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

வெள்ளத்தில் மிதக்கும் மக்களை காப்பாற்றுவதற்காக இறப்பர் வள்ளங்கள் ஈடுபடுத்தப்பட்டுவருகின்றனவென்றும் அரசு அறிக்கைகள் தெரிவிக்கின்றது. (து)

# 18 வயது யுவதியை முகத்தில் அறைந்த குடும்ப தலைவிக்கு சிறை

(ஜகார்த்தா)

பதினெட்டு வயது இளம் பெண்ணை முகத்தில் அறைந்த குற்றத்திற்காக இந்தோனேசிய குடும்பத்தலைவி ஒருவருக்கு ஒருவார கால சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

உணவு மேசையைச் சுத்தப்படுத்த மறுத்த வீட்டுப் பணிப்பெண்ணை முகத்தில் அறைந்ததாகவும், அப்பெண் அழ ஆரம்பித்ததும் வீட்டை விட்டுத் துரத்தியதாகவும் செய்யப்பட்ட முறைப்பாடு தொடர்பான விசாரணைகளின் பின்பே இத்தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன், ஆயிரம் அமெரிக்க டொலர் அபராதமும் மேற்படி குடும்பப் பெண்ணுக்கு விதிக்கப்பட்டுள்ளது.

இதே சமயம், ஒருவார காலம் முன்பு வீட்டுத்தலைவி பணிப்பெண்ணை துடைப்பத்தால் அடித்தாரா என்பது பற்றிய விசாரணைகளில் இந்தோனேசியப் பொலிஸார் தற்போது ஈடுபட்டுவருகின்றனர். (உ)

# வீதிகள் திருத்தம்

(ஈச்சமோட்டை)

நீண்ட காலமாகத் திருத்தப்படாமல் மக்களின் போக்குவரத்துக்கு மிகுந்த சிரமமளித்துவந்த யாழ்ப்பாணம் பத்திரிசியார் வீதி, குருசோ வீதி ஆகியவை தற்போது திருத்தம் செய்யப்பட்டு வருகின்றன. (உ-59)

# உலக தரிசன அறிவுப் போட்டி - 3

இல் பாராட்டுப் பரிசு பெறும் ஏனையோர் விபரம்

செ. ஜெரீம் நிரோஷன்
பிரதான வீதி, வட்டுக்கோட்டை

இரஞ்சிதமலர் செல்வநாயகம்
126,4 பலாலி வீதி, திருநெல்வேலி

பாலசுந்தரம் தர்ஷன்
நுணாவில் மேற்கு, சாவகச்சேரி

அப்பையா பாஸ்கரன்
கோப்பாய் தெற்கு

தம்பையா யோகராசா
சரசாலை தெற்கு

செல்வி யோ. ஜெயறோஸ்
திருக்குடும்ப கன்னியர் மட ஆங்கிலப் பாடசாலை

விசுவலிங்கம் செல்வநாயகம்
சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலி

சர்வேஸ்வரன் அபிராமி
16/23, சிவன் வீதி, திருநெல்வேலி

திருமதி வசந்தி ஞானதாஸ்
444, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்

தர்மராஜா அஜந்தகுமார்
வதிரி

திருமதி பூங்கோதை பாலபாஸ்கரன்
பிரம்படி லேன், கொக்குவில்

சண்முகசுந்தரம் ஜமுனா
''குமரன் வீடியோ சென்ரர்'' சங்கானை

செல்வநாயகம் அருட்குமரன்
பிரதேச செயலகம் நல்லூர்

கலாரஞ்சினி யோகராசா
பழைய பொலிஸ் நிலைய வீதி

பிலிப் நோயலா யூலியட்
8 ஆம் வட்டாரம் நெடுந்தீவு

நேற்று வெளியாகிய உலக தரிசனம்-இல 3 இற்கான விடைகளில் 8 தொடக்கம் 13 வரையான வினாக்களுக்கான விடைகள் தவறுதலாக இடம் பெற்று விட்டது.

சரியான விடைகள்

8) மேஜர் பாண்டே
9) தோமஸ் அல்வா எடிசன்
10) போதை மருந்து பாவனை
11) சித்திரிங்கன் ஜனா
12) 500 மில்லியன் டொலர்
13) ஜெனரல் பெர்வேஸ் முஷாரப்

இறைகாக்கும் வையகம் எல்லாம் அவனை
முறைகாக்கும் முட்டாச் செயின்
— குறள்

# வலம்புரி

## சனிபார்வை கூடாது!

இனப்பிரச்சினை விடயத்தில் சமாதான முயற்சியில் ஈடுபட்டிருக்கும் நோர்வேயின் விசேடதூதுவர் எரிக் சோல் ஹைம் கடந்த 1-ந்திகதி வன்னிப் பெருநிலப் பரப்பிற்குச் சென்றுதமிழீழவிடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். இப்பேச்சுவார்த்தை ஜனாதிபதியின் அனுமதியுடனேயே நடைபெற்றதாக ஜனாதிபதி செயலகம் விடுத்த அறிக்கையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் நோர்வேயின் விசேடதூதுவர், புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் நடத்திய பேச்சுவார்த்தைபற்றி தமக்கு எதுவும் தெரியாதென பிரதமர் இரட்ணசிறி விக்கிரமநாயக்கா பத்திரிகையாளரிடம் கூறியுள்ளார்.

காலஞ்சென்ற முன்னாள் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் ஓய்வையடுத்து பிரதமர் பதவியை பொறுப்பேற்ற இரட்ணசிறி விக்கிரமநாயக்கா பதவியேற்றகாலம் முதல் தமிழர்களுக்கெதிரான இனவாதக் கருத்துகளை அள்ளிவீசிவருகிறார். அவர் கக்கிய இனவாதத்தின் அறுவடையே பண்டாரவளைப் படுகொலை என்ற குற்றச்சாட்டும் பிரதமர்மீது சுமத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில்எரிக்சோல் ஹைம் வன்னி சென்று புலிகளின் தலைவருடன் பேசுவதை பிரதமர் அறியாமல் இருப்பதே நல்லதென ஜனாதிபதி கருதி, அதனை அவருக்குத் தெரியப்படுத்தாமல் இருந்திருக்கலாம்.

இலங்கையை ஆண்ட இராவணன், அவனது வீட்டின் எட்டாவது படியிலிருந்த சனீஸ்வரனின் பார்வையால் கெட்டான் என்ற வரலாற்றை ஜனாதிபதி சந்திரிகா அறிந்திருப்பார் போலும். அதனால் தான் நாட்டிற்கும் மக்களுக்கும் உதவக்கூடியதான சமாதானப் பேச்சுவார்த்தையின்பக்கம் பிரதமரின் பார்வை படாமல் இருப்பதில் ஜனாதிபதி கண்ணும் கருத்துமாகச் செயற்பட்டுள்ளாரென அனுமானிக்கமுடிகிறது.

எனினும் கிரகங்களின் கெட்டபார்வை கிட்டிய இடத்தில் இருந்தால் யோகம் எட்டியதாகவே இருக்கும் என்பது நம்பிக்கை. எனவே சமாதானப் பேச்சுவார்த்தை போன்ற சுபகாரியங்களை செய்யுமுன் கிரகதோசம் செய்துகெட்ட கிரகங்களை நீக்குவதே புத்திசாலித்தனமாகும்.

# அரசும் விடுதலைப்புலிகளும் உடன் பேச்சு நடத்த வேண்டும்

### யாழ் பல்கலை ஆசிரியர் சங்கம் ஜனாதிபதிக்கு மகஜர்

(தென்மராட்சி)

அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளும் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன் உடனடியாகப் பேசி இனப்பிரச்சினைக்கு ஒரு நிரந்தர தீர்வு காண வேண்டும்.

இவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள மகஜர் ஒன்றில் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் ஆசிரியர் சங்கத் தலைவர் பேராசிரியர் இரா. சிவச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற சங்கக் கூட்டத்தில் இது தொடர்பான தீர்மானம் மேற் கொள்ளப்பட்டது.

ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள அம்மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

பண்டாரவளையிலுள்ள சிறார்களின் நன்னடத்தை [illegible] முகாமில் இடம் பெற்றுள்ள படுகொலையை வன்மையாகக் கண்டிக்கின்றோம். நிராயுதபாணியாக இருந்த அவர்களை அதிகாலையில் ஆயுதம் தாங்கிய கும்பல் தாக்கி மிகவும் கொடூரமான முறையில் கொலை செய்தமையானது மிகவும் அநாகரிகமானது.

இவர்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதமளிக்க வேண்டிய அரசாங்கமே தனது பொறுப்பிலுள்ள இவர்களைக் காப்பாற்றமுடியாத செயலானது இந்நாட்டில் சட்டமும் ஒழுங்கும் சீரழிந்த நிலையையே எடுத்துக்காட்டுகின்றது.

இந்தப் படுகொலையின் எதிரொலியாக மலையகத்தில் நிகழ்ந்த வன்முறைகள் அதன் பின்னர் மலையக நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரசேகரன் கைது செய்யப்பட்டமை ஆகியவை அரசு இனப்பிரச்சினையின் அரசியல் பின்னணியைச் சரியாக இனங்கண்டு கொள்ளவில்லை என்பதையே அப்பட்டமாகக் காட்டுகின்றது.

துர் அதிஷ்டவசமாக வருடாந்த உற்சவங்கள் போன்ற அடிக்கடி இனக்கலவரம் நடப்பது இந்தநாட்டில் சகஜமாகிவிட்டது. அரசியல் ரீதியில் அணுக வேண்டிய பிரச்சினைக்கு பயங்கரவாதம் என நாமம் இட்டு வன்முறையால் அதை அடக்க முனைவது இந்தப் பிரச்சினையை மேலும் வளர்க்க உதவுமேயொழிய அதனைத் தீர்க்க ஒருபோதும் உதவமாட்டாது என நாம் திடமாக நம்புகின்றோம்.

ஆதலால் இந்தப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வே மிக உகந்த வழியாகும் என அம்மகஜரில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (க-77)

## சமயபாடக் கருத்தரங்கு

(சுன்னாகம்)

சங்கானை சண்டிலிப்பாய் கோட்டப் பாடசாலைகளில் தரம் 11ற்கு சமயபாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான சைவசமயபாடக் கருத்தரங்கு இன்று காலை 8 மணிமுதல் 4-30மணிவரை சித்தன்கேணி ஸ்ரீகணேசா வித்தியாசாலையில் நடைபெறவுள்ளது.

இதேவேளை உடுவில் சண்டிலிப்பாய் கோட்டத்தைச் சார்ந்த பாடசாலை ஆசிரியர்களுக்கு நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருந்த இக்கருத்தரங்கு, சைவபரிபாலன சபையின சமயபாடப் பரீட்சை காரணமாக எதிர் 12 ந்திகதி ஞாயிற்றுக்கிழமை மகாஜனக் கல்லூரியில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது (2)

## வீதி திருத்தம்

(ஈச்சமோட்டை)

நீண்ட காலமாகத் திருத்தப்படாதிருந்த ஏழாலை கிழக்கு களபாவோடைப் பகுதியிலுள்ள வீதிகள் திருத்தம் செய்யப்பட்டு வருகின்றன. (உ-59)

## யாழ். செயலகத்தில் நேற்று நேர்முக தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலக தேர்தல் திணைக்களத்தில் சிற்றூழியர்களை நியமனம் செய்வதற்கான நேர்முகத் தேர்வு நேற்று செயலக மண்டபத்தில் இடம்பெற்றது.

கடந்த ஏப்ரல் மாதம் நடைபெறவிருந்த மேற்படி நேர்முகப் பரீட்சை தவிர்க்க முடியாத காரணத்தால் ஒத்திவைக்கப்பட்டு கொழும்பிலிருந்து கிடைத்த பணிப்புரைக்கமைய நேற்று யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்டது.

மேற்படி பரீட்சையின் போது 28 பேர் தோற்றினராயினும் இருவர் மட்டுமே தெரிவு செய்யப்படவுள்ளனர். (க-12)

## 33 இலட்ச நிதி ஒதுக்கீடு இடை நிறுத்தப்பட்டது

காத்தான்குடியில் அமைந்துள்ள கிழக்கிலங்கை இஸ்லாமிய அங்கவீன நலன்புரி அமைப்பிற்கான கட்டடம் அமைக்கவென ஒதுக்கீடு செய்யப்பட்ட 33 இலட்சம் ரூபாய் நிதி, நிதித்தட்டுப்பாடு காரணமாக இடைநிறுத்தப்பட்டிருப்பதாக காத்தான்குடி பிரதேச செயலர் தெரிவித்துள்ளார்.

இதே வேளை, மேற்படி நலன்புரி அமைப்பு கட்டடம் அமைக்கப்படவிருந்த காணிக்கு சுற்றுமதில் அமைப்பதற்கு வடக்கு-கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களம் 97 ஆயிரம் ரூபாவை அன்பளிப்பு செய்துள்ளது. (உ-60)

## ஒடியல், புழுக்கொடியல் பொதி செய்யும் நிறுவனம் விரைவில் அமைக்கப்படும்

(கொழும்பு)

பனை அபிவிருத்திச் சபையினால் வடமராட்சியிலும் மானிப்பாயிலும் ஒடியல் புழுக்கொடியல் ஆகியவற்றை அரைத்துப் பொதி செய்யும் நிறுவனமொன்றை ஆரம்பிக்கப்படவுள்ளதாக இந்நிறுவனத்தின் தலைவர் ஆர். பாக்கியநாதன்தெரிவித்துள்ளார்.

மேலும் இந்நிறுவனத்தினால் மிளகாய்த்தூள், வறுத்த அரிசிமா ஆகியவற்றையும் தயாரித்து பொதி செய்து விற்பனை செய்யப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பனை மரங்கள் அதிகமாக உள்ள யாழ் மாவட்டத்தில் இந்நிறுவனத்தை ஆரம்பிப்பதனால் வேலையற்ற இளைஞர்கள் பலர் வேலைவாய்ப்பைப் பெறுவார்கள்.

அத்துடன் பனை உற்பத்திப் பொருட்களான ஒடியல், புழுக்கொடியல் ஆகியவற்றுக்கு நியாயமான இலாபம் கிடைக்குமெனவும் இவ்வாண்டு இறுதிக்குள் நிறுவனம் ஆரம்பிக்கப்படுமெனவும் நிறுவனத்தின் தலைவர் தெரிவித்துள்ளார். (வி)

## தொழில் அமைச்சருக்கு வரவேற்பு விழா

[மட்டக்களப்பு]

புதிய தொழிலமைச்சராக நியமிக்கப்பட்டிருக்கும் அலவி மௌலானாவுக்கு வரவேற்பு விழா ஒன்று நடத்தும் ஏற்பாடுகளில் காத்தான்குடி தொழிற்சங்கங்கள் ஈடுபட்டுள்ளன.

இது தொடர்பாக அமைச்சருடன் கலந்துரையாடுவதற்கென காத்தான்குடி தொழிற்சங்கத் தலைவர்எம் லெப்பை கொழும்புக்குச் சென்றுள்ளார்.

இதே சமயம், காத்தான்குடி தொழிற்சங்க அங்கத்தவர்களுக்கு சீருடைகள் வழங்கப்படவிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## சமுர்த்தி உத்தியோகத்தர் கொடுப்பனவு விபரங்கள்

### யாழ்.செயலகத்திற்கு அனுப்பிவைப்பு

(யாழ்ப்பாணம்)

சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கான கொடுப்பனவு விபரங்கள் யாழ் செயலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இக்கொடுப்பனவுகளில் அதிகரிக்கப்பட்ட தொகையான ஆயிரம் ரூபாவும் சேர்க்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை யாழ். குடாநாட்டு 14 பிரதேச செயலகளர் பிரிவுகளில் புதிதாக சமுர்த்தி உத்தியோகத்தர்களாக நியமனம் பெற்றவர்களுக்குரிய கொடுப்பனவுவிபரங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் அறியப்படுகிறது. (க-12)

## இன்று திரைப் படம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக் கழகபுற நிலைப்படிப்புகள் அலகும் திரைப்பட வட்டமும் இணைந்து வழங்கும் மாற்றுத் திரைப்படக் காட்சித் தொடரில் பாரதிராஜாவின் ''நிழல்கள்'' என்னும் திரைப்பட வீடியோ காட்சி இன்று சனிக்கிழமை மு.ப 10 மணிக்கு புவியியல் துறை மண்டபத்தில் காண்பிக்கப்படவுள்ளது

இப்படக் காட்சிக்கு ஆர்வலர்கள் எவரும் வருகைதர முடியுமென இணைப்பாளர், பேராசிரியர். இரா. சிவசந்திரன் தெரிவித்துள்ளார். (ந-5)

## தீ விபத்து

(கொழும்பு)

கட்டுநாயக்கா சுதந்திர வர்த்தகவலயத்திற்குட்பட்ட கட்டுகொட பகுதி ஆடைத் தொழிற்சாலையில் நேற்று அதிகாலை ஏற்பட்ட தீ விபத்தினால் பெரும் சேதம் ஏற்பட்டிருப்பதாக தெரியவந்துள்ளது.

எனினும் சேதம் குறித்த விபரங்கள் எவையும் வெளியிடப்படவில்லை.

அதிகாலை 2மணியளவில் ஏற்பட்ட தீயை கொழும்பில் இருந்து வந்த தீயணைப்புப் படையினரே அணைத்ததாக கூறப்படுகிறது. (உ-59)

## பேராதனை பல்கலை பெண்கள் கழிப்பறை விவகாரம் விசாரணை நடத்தமுடிவு

(கொழும்பு)

பேராதனைப் பல்கலைக் கழக விவசாய பீடத்தின் பெண்கள் கழிப்பறையில் இரகசிய வீடியோ கமரா பொருத்தப்பட்டமை தொடர்பாக பக்கச்சார்பற்ற விசாரணை மேற்கொள்ளப்படும் என மேற்படி பல்கலைக் கழக வட்டாரங்கள் உறுதியளித்துள்ளன.

இதற்கென விசேட விசாரணைக் குழுவொன்று அமைக்கப்பட்டிருப்பதாகவும் ஒரு வாரத்திற்குள் விசாரணை நடத்தி குற்றவாளிகளுக்கெதிராக தகுந்த சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச் சம்பவத்தில் மேற்படி பல்கலைக்கழக விரிவுரையாளர் சம்பந்தப்பட்டிருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (உ)

## மாணவர் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி கல்விவலயப் பாடசாலைகளில் கல்வியியிலும் க, பொ. த. (சா த) மாணவர்களுக்காக, மட்டுவில் இந்து இளைஞர் மன்றத்தினால் நடத்தப்படும் பரீட்சை முன்னாயத்த வகுப்புக்களில், நாளை 5-ந்திகதி நடைபெறவிருந்த வகுப்புக்கள் மட்டும் எதிர்வரும் 26-ந்திகதிக்கு பிற்போடப்பட்டுள்ளது.

ஏனைய வகுப்புக்கள் உரிய நிலையங்களில் வழமைபோல் நடைபெறுமென தென்மராட்சி வலயப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் இ. கணேதன் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ)

## கொடிவாரம் அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட மக்கள் நலன்புரிச் சங்கத்தினர் தமது சங்கவளர்ச்சிக்காகவும் இடம்பெயர்ந்த மக்களின் சுகாதார, கல்வி முதலுதவிவசதிக்காகவும்யாழ் மாவட்டத்தில் எதிர்வரும் 20ஆம் திகதிவரை கொடி தினத்தை அனுஷ்டித்து வருகின்றனர்.

அரச திணைக்களங்கள், பாடசாலைகள்மற்றும்பொது இடங்களில் நடைபெறவுள்ள இக் கொடி தின நிகழ்விற்கு அனைவரையும் ஒத்துழைப்பு வழங்குமாறு மேற்படி சங்கத் தலைவர் தெரிவித்துள்ளார். (க-3)

# இனயுத்தத்தின் கொடூரத்தால் 20 ஆயிரம் பேர் விதவைகளாயினர்

### அமைச்சின் அறிக்கைகள் தகவல்

(கொழும்பு)

இலங்கையின் வடபகுதியில் 18 வருடங்களாக நடை பெற்றுவரும் இனயுத்தத்தி னால் சுமார் 20 ஆயிரத்துக்கு மேற்பட்ட பெண்கள் விதவைகளாக்கப்பட்டுள்ளார் களென்று மகளிர் விவகார அமைச்சின் ஆய்வறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் 1700, கோப்பாயில்2400, பருத்தித் துறையில் 1700, சாவகச்சேரியில் 2700, நல்லூரில் 2 00, உடுவிலில் 1750, கரவெட்டியில் 1700, சண்டிலிப்பாயில் 1440 சங்கானையில் 1312, ஊர்காவற்றுறையில் 580, தெல்லிப்பளையில் 500, வேலணையில் 385, பளையில் 230, மருதங்கேணியில் 28 பெண்களும் விதவைகளாகி யுள்ளனர் என்று அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (வ)

## ஈழநாதம்

பிரசுரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வன்னிப்பிரதேசத்திலிருந்து வெளிவரும் ஒரேயொரு தமிழ் தினசரி ஈழநாதம் என் பதும் குறிப்பிடத்தக்கது.(ம)

## நோர்வேயின்...

வர் வேலுப்பிள்ளை பிரபா கரனுடன் பேசிய பின்னர் அது தொடர்பாக ஜனாதி பதியை சந்திக்க இருந்த வேளையின் போதே ஜே வி பி. இத்தகைய நிராகரிப்பு அறிக்கையை விடுத்துள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப் பட்டிருப்பதா வது;

இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சினையாக இருந்துவரும் இனப்பிரச்சினையை வெளி நாட்டவர்கள் எவரும். ஒரு போதும் தீர்த்துவைக்க முடி யாது வெளிநாட்டவர்களின் மத்தியஸ்த்தம் எமக்குத் தேவை இல்லை. நோர்வே அரசு உண்மையான சமாதா னத்தை ஏற்படுத்த இங்குவர வில்லை உண்மையில் இனப் பிரச்சினையைவளர்த்து அதன் மூலம் ஆயுதவிற்பனைகளை அதிகரிக்கவே நோர்வேயும், வெளிநாடுகளும் எமது நாட் டுப்பிரச்சினைகளில்தலையிடு கின்றன.

விடுதலைப் புலிகளின் பல அலுவலகங்கள் நோர்வேயில் உள்ளன.

அந்த அலுவலகங்களுடன் நெ ருங்கிய தொடர்புடைய நாடு நோர்வேயாகும். இந்நிலை யில் வெளிநாட்டவர்களின் மத்தியஸ்த்தை நாம் நிராக ரிக்க வேண்டும் என்று ஜே. வி.பி பிரச்சாரச் செயலாளர் தெரிவித்துள்ளதோடு அரசு உடனடியாக இம்முயற்சி யைக் கைவிட வேண்டும் என்றும் கோட்டுள்ளார். (வ)

## பண்டாரவளை---

இவ்வாறு யாழ். பாது காப்பு நடவடிக்கைத் தலை மையகத்தின் கட்டளை அதி காரி மேஜர் ஜெனரல் ஏ.ஈ ரி. விஜேந்திரா விடுத்துள்ள விஷேட அறிவித்தலில் தெரி வித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள அறிவித் தலில் மேலும் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது.

தடுப்பு முகாமில் தங்கியி ருந்த இளைஞர்களுக்கு அர சாங்கம் சுயதொழில் பயிற்சி நெறிகளை வழங்கி சிறந்த பிரஜைகளாக விடுதலை செய்வதை நோக்காகக் கொண்டிருந்த வேளையில் இக்கொடூரம் நிகழ்ந்திருப் பது வேதனைக்குரியது.

இச்சம்பவத்தில் உயிரிழந்த இளைஞர்களின் பெற்றோர், உறவினர்களுக்கு தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதாகவும் அவரது அறிக்கையில் மேலும் தெரி விக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ)


**ஸ்ரீசெல்வா**
(யாழ்ப்பாணம்)
அர்ஜுன், அபிராமி
பிரகாஷ்ராஜ்
நடித்த
**வானவில்**
0-30,2 30 (ப. நேரம்)

அடுத்த வெளியீடு
பிரியமானவளே
(கி-688)


## முல்.கடல்

துள்ளதாக புலிகளின் வானொலி அறிவித்துள்ளது.

சுமார் மூன்று மணி நேரம் கடுமையான கடற்சமர் நடந்ததாகவும் அந்த வானொலி மேலும் அறிவித் துள்ளது.

இச்சமரில் உயிரிழந்தோர் விபரம் வருமாறு.

கடற்கரும்புலி

- லெ. கேணல் சல்மான்/ இரும்பொறை (சிவஞானம் சிவா ஐங்கரன்) பூநகரி-நல் லூர்.

கடற்கரும்புலி

- கப். சதாசிவம் (பிள்ளை யார் திருச்செல்வம்) மட்டக் களப்பு.

கடற்புலி

- மேஜர் நிலவன் (சிவபால சிங்கம் வேதகணேசன்) யாழ்ப்பாணம்.

கடற்புலி

- கப்டன்லக்சலா(கந்தையா விஜயநந்தினி) யாழ்ப்பாணம்

கிளாலியில் தவறுதலாக இடம்பெற்ற வெடிவிபத்தில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த காவல்துறை பரி சோதகர்

- செல்வம் யோகராசா மரணம் அடைந்துள்ளார்.

சாவாகச்சேரி, மட்டுவில் பகுதியில் இடம்பெற்றமோத லில்.

- தயா என்றழைக்கப்படும் நிறஞ்சன் தவராணி உயிரி ழந்ததாக புலிகளின் வானொலி அறிவித்துள்ளது. (வ-5)


**நாகர்ஸ்**
(சுன்னாகம்)
அஜித்(இருவேடம்)
சிம்ரன் நடித்த
**வாலி**
(ரீல்ஸ்)
11.00;2.30, (பு.நே)
(கி-999)


# ஜனாதிபதியிடம் டக்ளஸ் கோரிக்கை

தலவாக் கொல்லையில் இடம் பெற்ற அசம்பாவிதத் தினை அடுத்து பொலிஸாரி னால் கைது செய்யப்பட்ட மலையக மக்கள் முன்னனித் தலைவரும் நுவரெலியா மாவட்ட எம்பியுமான பெ. சந்திரசேகரனை விடுதலை செய்யுமாறு ஈ.பி.டி.பி அமைப்பின் செயலாளரும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவும், ரெலோ அமைப்பினரும் ஜனாதிபதி சந்திரிகாவைகோரியுள்ளனர்.

சந்திரசேகரனை அரசாங் கம் கைது செய்தது முறை யற்றதெனவும், எனவே அவரை உடனடியாக விடு தலை செய்ய வேண்டுமென வும் அக் கோரிக்கையில் தெரி விக்கப்பட்டுள்ளது. (வ)

## வெளிவிவகார..

சந்தித்துப் பேசிய அமைச்சர் கதிர்காமர் தமிழீழ விடு தலைப் புலிகள் அமைப்பு பயங்கரவாத நடவடிக்கை களில் ஈடுபடுவதால் அதனை தடை செய்வதுடன் அதன் முன்னணி அமைப்புக்களமுழு மையாகக் கண்காணிக்கப் படவேண்டும் என்றும் வலியு றுத்திக்கேட்டுக்கொண்டார்.

விடுதலைப் புலிகள் அமைப் பினால் வெளிநாடுகளில் சேக ரிக்கப்படும் பணம் யுத்தத் தில் சிறுவர்களை ஈடுபடுத்த பயன்படுத்துவதாகவும், இத னால் பாரிய உயிர் இழப்புகள் ஏற்படுவதாகவும் அமைச்சர் கதிர்காமர் மேலும் குற்றம் சாட்டினார்.

இதே வேளை விடுதலைப் புலிகள் வெளிநாடுகளில் நிதி சேகரிக்கும் நடவடிக்கையை கட்டுப்படுத்த இலங்கையும் இங்கிலாந்தும் கூட்டாக செயற்படுவது அவசியம் என் றும் இலங்கை அரசினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதே வேளை ஒருபுறம் நோர்வே மூலம் புலிகளுடன் சமாதானப் பேச்சை ஆரம் பிக்க முயலும் அரசு மறுபுறம் இங்கிலாந்தில் புலிகள் அமைப்பை தடை செய்யக் கோருவது பெரும் வியப்பை அளிப்பதாக அரசியல் அவ தானிகள் கருத்துத் தெரிவித் துள்ளனர். (ந-2)


**லக்ஷ்மி**
[இணுவில்]
விஜய், ரம்பா
நடித்த
**மின்சாரக் கண்ணா**
(ரீல்ஸ்)
10;30, 2;30 (பு.நே)
(கி-1000)


## குடாக்கடல்

பட்டுள்ளது.

கொழும்புத்துறை பாசை யூர், குருநகர் ஆகிய பகுதி களிலுள்ள கடற்றொழிலா ளர் இத்தடை உத்தரவினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள னர். இதேவேளைஇம் மீன்பி டித்தடையானது இம்மாதம் 27ஆம் திகதி அனுஷ்டிக்கப் படும் மாவீரர் தின நிகழ்வு களின் முன்னோடிப் பாது காப்பு நடவடிக்கையாக இருக்கும் என கருதப்படுகி றது. (வ)

## 35பிரதி ..

முக்கிய அமைச்சுகளுக்குஇன்ன மும்பிரதியமைச்சர்களின்பெய ர்களைஜனாதிபதி தீர்மானி க்கவில்லை.

எனினும் இம்முறை பிரதி யமைச்சர்களின் தெரிவில் இதுவரை காலமும் அரசியல் வழக்கில் இடம்பெறாத வகையில் சுகாதாரம், விவ சாயம், கல்வி, நெடுஞ்சா லைகள், நகரஅபிவிருத்தி, நிர்மாணம், பொது வசதிகள் இனவிவகாரம் தேசிய ஒருங் கிணைப்பு ஆகிய அமைச்சுக ளுக்கு இரண்டு பிரதியமைச் சர்கள் நியமிக்கப்பட்டுள்ள னர் இதேவேளைவிளையாட் டுத்துறை பிரதியமைச்சர் பதவி ஈ.பி.டி.பியினருக்கு வழங்கப்படலாம் எனவும் தெரியவருகிறது. (ந-2)


**யாழ்ப்பாணம வணிகர் கழகம் அறிவித்தல்**

28-10-2000ம் அன்று நடைபெற இருந்த எமது கழக விஷேட பொதுச் சபைக் கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தால் 04 - 11 - 2000 இன்று சனிக்கிழமை பி ப 3.00 மணிக்கு நடைபெறும் என்பதனைச் சகல பொதுச் சபை உறுப்பி னர்களுக்கும் அறியத் தருகின்றோம்.

யாழ்ப்பாணம் வணிகர் கழகம்
இல. 165 மானிப்பாய் வீதி
யாழ்ப்பாணம்.

[கி-998]


# மரண அறிவித்தல்

## சின்னையா முத்துக்கிருஸ்ணர்

(ஓய்வு பெற்ற ஆசிரியர்)

சுன்னாகம் கிழக்கைப் பிறப்பிடமாகவும், கந்த ரோடையை வசிப்பிடமாகவும் கொண்ட யாழ். கந் தரோடை தமிழ் கந்தையா வித்தியாசாலையின் ஓய்வுபெற்ற ஆசிரியர் சின்னையா முத்துக்கிருஸ்ணர் நேற்று (03-11-2000) வெள்ளிக்கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்ற சின்னையா தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனும், காலஞ்சென்ற ஆறுமுகம் தம் பதிகளின் அருமை மருமகனும், பூமணி (ஓய்வுபெற்ற உப அதிபர் யாழ் கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாசாலை) அவர்களின் பாசமிகு கணவரும், பூரணம், தங்கராசா, சிவபாக்கியம் (மலேசியா), சரஸ்வதி ஆகியோரின் அன்புச்சகோதரனும், இராம நாதன், நாகநாதன் பத்மநாதன், பூலோகநாதன் சந்திரநாதன், மகேஸ்வரி, கோகிலாம்பிகை, இராச துரை, நாகரத்தினம் ஆகியோரின் அருமை மைத்துன ருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று(3-11-2000) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சுன்னாகம், கொத்தியாலடி இந்துமயானத் தில் தகனம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் கள், அனைவரும் தயவுசெய்து ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;

கந்தரோடை,
சுன்னாகம்.

மு. பூமணி
(மனைவி)

(கி-1001)

# நன்றிகள் பல ...

மண்ணின் மடியில்
**05-06-1961**



மக்கள் மனதில்
**19-10- 2000**

19—10—2000 அன்று அகால மரணமடைந்த
எமது அன்புச் செல்வம்

## மயில்வாகனம் நிமலராஜன்

அவர்களின் மறைவைக் கேட்டு உற்ற நேரத்தில் தோள்கொடுத்த அனைத்துப் பத்திரிகை நண்பர்கள், ஊடகவியலாளர்கள், மதப்பெரியார் கள், அயலவர்கள், அந்திமசேவையில் உதவிய நண்பர்கள், உறவினர்கள், உலகெல்லாம் அவரின் மறைவுக்கு குரல்கொடுத்த, குரல் கொடுக்கும் அனைத்து அன்புள்ளங்களிற்கும் நன்றிகள் பல ...

17/3, கச்சேரிநல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

அப்பா, அம்மா, மனைவி,
பிள்ளைகள், சகோதரிகள்

(கி-995)

இப் பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தின ரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலா சத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 04ஆம் திகதி அச்சிட்டு வெளியி டப்பட்டது ப